KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு செப்டம்பர் மீ 26வ [No. 38.

OFFICE OF THE REGISTRAR ... 1929 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 741
2. அப்பர். (காப்பிய விலக்கணம்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 743
3. குலசேகரர் (பிறவி வேண்டுஞ் துறவி) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 745
4. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்துமாலை) 748
5. அகப்பொருள் வரலாறு (பரத்தையிற் பிரிவு) K. இராமரத்னம் ஐயர் B. A. 750
6. அண்ட புராணம் (புகையிலைச்சிறப்புப்படலம்) T. S. இராமசந்திர ஐயர் B.A. 752
7. வில்லிபாரதம் (இராசசூயச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை B. A, B. L. 753
8. சன்னெறியின் ஏற்றம் C. சுந்தரம் ஐயர் B.A. 754
9. கம்பராமாயணம் (உண்டாட்டுப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. 755
10. வர்த்தமானம் 759

கலா நிலயம்

சுய கல்சர்.

III

தருமசிந்தனையின் தன்மையைச் சென்றநா ளியம்பி, அது, மானுட இயற்கையில் சுயமாகவே அமைந்துள்ள வோர் அம்சம் என்றும், மானுடர்க்கிருக்கும் சுய ஆராய்ச்சி என்னுஞ் சக்தியால் அதனை வளர்த்துக் கொள்வது சுயகல்சரின் கிளைப்பயிற்சி ஒன்று ஆகுமாறும் வகுத்துரைத்தோம். இத்தருமசிந்தனையைப் போல் சுயகல்சரின் கிளைகளிலொன்றாய் வளர்வதிற் கிருப்பது தெய்வசிந்தனையுமாம். இதன் தன்மை யாதெனச் சிறிது பார்ப்போம்.

சுயகல்சரின் இத் தெய்வசிந்தனை என்னும் அம்சம் வளர்வதற்கும், சுயவாராய்ச்சிச் சக்தியைத் துயிலவிடாமல் எழுப்பி எழுப்பி நமது உள்ளத்தைப் பன்முறை சோதித்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். அச் சக்தியைக்கொண்டு நம் உள்ளத்தைத் துருவுங்கால், ஐம்புல னறிவிற்கு எட்டவல்ல அளவிற் குட்பட்டதாய், ஓர்நிலை நிற்றலின்றி என்றென்றும் மாறிக்கொண்டிருக்கின்ற இப்புறவுலகத்தினோடு நம்மைத் தொடர்புபடுத்தி இயக்குகின்ற எண்ணங்கள் இருப்பது உணர்வோம். அவ்வெண்ணங்கள் நிறைவேறுவதற்கு உதவியாய்ப் புற உலகத்தைக் காணவும் அறியவும் கண் முதலிய பொறிகளும், அப்புறவுலகப் பொருள்களை நாம் கைக்கொண்டு நம்முடையதாக்கிவைக்க அவயவங்களும் இருப்பதும் தெரியவரும். புறத்துலகத் தொடர்புடைய அவ்வெண்ணங்களும் இவ்வவயவங்களும் நம்பாலிருப்பதைமாத்திரம் அறிவதல்லாமல், இதற்கெல்லாம் வேறான மற்றோர் சக்தியும் நம்முளே நிகழ்வதற்கிருக்கின்ற தென்பதும் சுயஆராய்ச்சியின் பலனாய்ப் புலப்படும். அச் சக்தி, நாம் கண்டு கையாள்கின்ற பொருள்களோடு நின்றுவிட நினைத்திடாது; காலம் இடம் முதலிய எல்லை வரம்புகளுக்குள் அடங்கிக்கிடக்க நேர்ந்திடாது; எல்லையற்றதாய், தானே சிருஷ்டிக்கப்படாமல், எல்லாச்சிருஷ்டிக்கும் காரணபூதமாயிருக்கின்ற வொரு பொருளைத் தேடித்தேடி, நிரந்தரமாய் நிர்மலமாய் அறிவிற்கறிவாகி நிற்கின்ற அவ்வொன்றினை அடையுங்காறும் அமையாமல் முயல்கின்ற அருமையும் பெருமையும் வாய்ந்தது. தெய்வாம்சம் என்பது இதுவே. இதன் மகத்துவத்தை மாந்தர் தம் மொழிகொண்டு எத்துணைப்புகழினும் அதற்கும்மேல் அது பலபடி உயர்ந்ததாகையால், மிகைபட நவில்தல் என்பது இதன்பால் இயலாதென்றாம். ஏனெனில் சுவை யொளியூறு ஓசை நாற்றங்களால் மதித்துணரப் படுகின்ற இவ்வுலகத்தி லல்லாது வேறோர் உன்னத மாயஉலகத்தில் ஊடாடுதற்கேற்ற குறிப்புடைய அச்சக்தியை உரையால் அளவிடுவ தெங்ஙனம்! இடுவதற்கியலாத அளவைக் கடப்பதென்பது மில்லையே. இச்சக்தி நம்முள்ளே வளர்ப்பாரின்றி வாடாமல், கிளர்ப்பாரின்றித் துஞ்சாமல், சுயவாராய்ச்சியினால் அதனை நடைமுதலில் பயின்றுவருமாறு புரியோமாயின் வேறு பற்பல புரிந்து என்செய்தோம். கடவுட் கருத்தைப் பொலிவுறப் பெருக்கும் இச்சக்தியைப் போற்றிவளர்த்தல் சுயகல்சரின் முக்கியநோக்கமாகும். இதனால், தெய்வத்தின் மெய்யுணர்வு நம்முள்

18983
3L
7721, N28WN
N29-2-39

ளத்தே அரும்பித்தெருண்ட தன்மையில் மலர்ந்து உலகெங்கும் கடவுள்மணம் கமழ்வதோர் கருத்தினராவோம்.

இத் தெய்வசிந்தனையும் தருமசிந்தனையும் ஒன்றோடொன்று ஊடாடித் துன்னித்திகழுந் தன்மையன. இவ்விரண்டும் ஒன்றினை ஒன்று சார்ந்தே வளருமேயல்லாது, ஒன்றின்றி மற்றது ஓங்குமெனல் ஒண்ணாது. தருமசிந்தனையின் முதிர்ச்சியால் திரண்டு உதிக்குந் தோற்றமே தெய்வசிந்தனை என்றாலும், இவ்வுண்மையை உரைத்ததாகும். இந்த விரண்டு சிந்தனைகளும் ஒருவன்பால் நிகழும்போது அவன் தன்னுடைய இலாபநஷ்டங்களைக் கணக்கிடுவதில்லை. ஆதலின், சுயநயமில்லாது நிகழ்வதால் அவை யிரண்டும் ஒரு தன்மையன. எதனை நாம் உவகையொடு வியந்து ஆராதிக்கின்றோமோ அதுவே நாம் ஆமாறு புரிதல் மனத்தின் தொழில். நடுநிலை நீதியும், நிகிலப் பொருள்களனைத்தின்பால் நிலைத்தஅன்பும் உடையதாய்த் திகழ்வது கடவுள், என்னுமவ் வுண்மையைக் கண்டு சாதிப்பதே எவ்வகைச் சமயநெறியின் சாரமும்ஆகும். 'அறவாழி அந்தணன்' என்றவனை யழைப்பதில் இந்த இரண்டுதன்மைகளும் அடங்கியிருக்கின்றன. தருமம் அன்பு என்பன சுயநயச் சூழ்ச்சிக்கு முற்றிலும் எதிரானவை. அறவாழி யந்தணன் என்று அடைபடுத்து விளங்குகின்ற கடவுளின் நிலையே நம் மனத்தில் தங்குமாறு, அதன்கண் இயற்கையா யமைந்துள தெய்வசிந்தனையை வளர்ப்போமாயின் அறமும் அன்பும் நம் உரிமைமாத்திர மாவதன்றி நமது உடைமையுமாகி, அவ்வுடைமை மிகுந்து எங்கும் பரத்தலால் அதன் வடிவமே நாம் ஆவோம். இவ்வண்ணம், உரிமை உடைமையாய், உடைமை வடிவமாகின்ற தத்துவத்தைத் தன்னுட்கொண்டது தெய்வசிந்தனை என்னும் சக்தி. ஈட்டிய பொருளை இழப்பதற்கு எவரும் மனங்கொள்ளார். அப்பொருள் எதுவாயினும் அதனையே கைக்கொண்டு நம்மைவிட்டு அது அகலாவண்ணம் மற்றவைகளை எல்லாம் எளிதில் துறக்க இசைகின்றோம். பணத்தைத் தேடிப் புதைத்துளோன் ஒருவன், அது குறையாதிருக்கும் பொருட்டுக் கொடையனைய அறங்களையும் கிளையுறவும் கைவிடவேண்டி நேர்கின்றது. ஈட்டிய பணம் இருக்கவேண்டு மெனின் கண்ணோட்டம் கூடாது என்னுங் கருத்து அவனுள்ளே ஆழ்ந்துவிடுகின்றது. "தாக்ஷண்யம் தன நாசனம்" என்று, பொருளாதாய விதி சில விளம்பித் தருக்குற்றுத் திரிதலே அவன் கடன். மூலதனம் முதலிய சாதனங்களைக் கொண்டு பணம்பெருகப்பெற்றவன், இவ்விதம் அதனை வைத்து, ஒழிந்தனவற்றையெல்லாம் அகற்றி விடுகின்றான். நால்வரிடைச் சென்று நடமாடும்பொருட்டு மனிதனது அகங்கார மமகாரங்கள் சிறிதும் பெரிதுமாய் எடுத்திருக்கும் வடிவங்களன்றோ இப்பணத்தின் வகைகள். தன்னைப் போற்றுதற்கே இப்பணம் ஈட்டப்பெற்றிருக்கின்றது என்னுங் கருத்துடைய ஒருவன், பணத்தையே முதலாகவைத்து மற்றவைகளை அறவே அகற்றிவிடுகின்றான் என்பதும், தன்னையே முதலாகவைத்து மற்றவைகளை அகற்றிவிடுகின்றான் என்றுரைப்பதும் ஒன்றேயாம்.

பணத்தைச் சேர்த்தவன்செய்தி இதுவாக, மற்று எதனை ஈட்டினோர் செய்தியும் முடிவின்முறையில் அன்னதே. பிறப்புரிமையாகிய தருமசிந்தனை தெய்வசிந்தனை என்னுமிவ் விரண்டையும், சுயவளர்ச்சி என்னுமவ் வியற்கைச்சாதனங்களால் வளர்த்துப்பெருக்கி, அறம் அன்பு என்னும் செல்வங்களை ஈட்டியவர்களும் அவைகளையே பற்றிநின்று, அவைகளுடன் முரண்படும் மற்றவைகளையெல்லாம் ஒருபொருளென மதியாமல் அகற்றிவிடுவர். ஈட்டியபொருளை இழப்பதற்குஅஞ்சுவதாமவ்வொருதன்மைஇவர்களுக்கும்பொருந்தும். 'தாக்ஷண்யம் தனநாசனம்' என்றுதனத்தை முன்னிட்டுக் கண்ணோட்டத்தைச் சிதைப்பவ ரவராயின், இவர் "தனம் தாக்ஷண்ய நாசனம்" என அவ்வாசகத்தை மாற்றிக் கொண்டவராய், கண்ணோட்டத்தைமுன்னிட்டுத்தனத்தையே தகவிலதென்றுவெறுப்பார்.—('தனம்' என்னுமிச் சொல் பணத்தை மாத்திரமன்றி மனிதருடைய ஆசைக்கும் சுகத்திற்கும் இலக்காயிருக்கின்ற யாவற்றையும் பொதுவாகக் குறித்து நிற்கின்றது)—தருமம் தலைகாக்கும் என்னுங் கொள்கையும் அவர்களுக்கு நகையே விளைக்கும். ஏனெனில், தருமத்தை ஈட்டுவதும் தம்பொருட்டே என்ற சூழ்ச்சி அவ்வுரையில் அடங்கியிருக்கின்றதன்றோ! தருமத்தின் தலையைக் காக்கத் தம்தலையைக் கொடுப்பதே முறையென முன்னணி நின்று முயல்வார் அவ்விழுமியோர். தருமத்தை அன்பினை ஈட்டியவர், அதற்கோர் சிதைவுநேராவண்ணம் வேறெதனையும் துறக்கலாவார். ஆடியது சூதேனும் வாய்மைத் தருமத்தின் நிமித்தம் உதிட்டிரன் நாட்டைவிட்டேகினான். கொடையறம் வளர்த்த நிடதநாடுடையவள்ளல், விண்ணவர் அவனைத் தமயந்தியின்பால் மணத்தூது தமக்காகப் போகென்றிரந்தபோது, என்செய்தான்! "மெய்த்தருமம் நன்றெனப் புன்னகை கோட்டினான்" என்றும், "பொய்ம்மைத் தீதென்னும் தருமத்திற்கு" அஞ்சினனென்றும், தேவர் பெய்த நஞ்சைக்கண்டு நளன் கலங்கிப் பின் 'சொன்னவை மறுக்கிலன்' என்று துணிந்தானென்று அதிவீரராமபாண்டியன் உரைத்தானேனும், பாண்டியனின் பலபடி புலமைமிக்க புகழேந்தி "கோதையைத் தன் சூதத்தால் கோதாக வென்றானுக்கோ" என அவன் தான் ஈட்டிய தருமத்தின் தலைகாத்தற்குச்சிறிதும்திகைக்காமல் பெயக்கண்ட நஞ்சை உண்டு அமைந்தபரிசு நமதகமுருகக் காட்டுகின்றார். தருமத்தின்பொருட்டு நளன் காதலியைக் கைவிட்டதுபோல், தயாதன் தன் மதலையை 'நெடுங்கானம் படரப்போகு' என்றான். தேர்க்காலில் தன்புதல்வனைக் கிடத்தினான் இன்னொரு வேந்தன். இயற்பகை தன் மனைவியை விட்டனன். பதி இழந்தானேனும் பாலனை யிழந்தானேனும் படைத்த நிதியிழந்தானேனும், மாலையிட்ட தன் மனையாள் கழுத்தி லின்று வாளையிடப் புகுவானேனும், ஈட்டிய தன் தருமத்தை 'இழக்கமாட்டேன்' என்று பற்றி நின்றான் அரிச்சந்திரன். கன்னன் செய்கையை என்னென்றுரைப்பது! தான் வளர்த்த தருமத்தைக் கைவிடாது காப்பதற்கு, அதன் பயனாய புண்ணியமனைத்தையும் மறையனாய்வந்த தன் மைத்துனற்கு நல்கினான். தருமத்தையே துறந்தேனும் தருமத்தைக் காத்த இக்கன்னன் செயலைக் கருதுங்கால் 'தன்னையுந் துறக்குந்தன்மை தருமத்தேதங்கிற்றன்றே' என்ற கம்பரடியொன்றைச் சிறிது மாற்றியமைக்க எம்மனம் தூண்டுகின்றது.

ஆதலாற்றான் தருமசிந்தனை, சுயநயநோக்கம்அற்றதென முன்னர்க் கூறினோம். பொன்னும் வெள்ளியும் தன்னுடைமையாகப் பெருக்கிக்கொண்டவன் அதனை இழக்க மனம் பொறுனைகயால், பொறை, ஈகை, கிளையுறவு, கண்ணோட்டம் ஆகிய தருமங்களையெல்லாம் அவன் போக்கிலேபோகவிட்டு விவகரிக்கவேண்டியது முறையேயாம். மற்று, அறச்செல்வமும் அதன்தொடர்புடைய கடவுட்செல்வமும் ஈட்டினவனும்அவைகளை இழக்க மனம்பொறுனைகயால், அதன்பொருட்டுத் தன்னையேதுறக்குந் தனிப்பெருந்தகையவனாகின்றான். காரணகாரிய முறை இவ்விரண்டிற்கும் ஒன்றே. ஈட்டமுயல்வது எதுவென்னும் நோக்கத்தைப்பற்றியே மாந்தர்மேன்மையும் தாழ்மையும்அடைகின்றனர். சுயகல்சர், உயர்ந்த நோக்கத்தின்பால் உய்க்கும் தன்மையது. மற்றுப் புறப்பொருள்களைத் திறமையுடன் கையாண்டு பயன்படுத்திக்கொள்ளப் பயிற்றுவிக்கும் எல்லாச் சாத்திரங்களும் சாதனங்களும் மாந்தரினத்தைத் தாழ்மையின்பாலே பிடர்பிடித்து உந்திச்செல்கின்றனவென்பதற்கு ஐயங்கொள்ள இடமில்லையே. இப்படி உலகெங்கும் ஐயமிலாவகை தருமத்தோடு தெய்வத்தோடு இணைந்து இயங்குதற்கியன்ற சிந்தனைகள் எவ்வெவர் உள்ளத்திலேயும் இயற்கையாயிருக்கச் சுயஆராய்ச்சியால் அவைகளை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றுமுயலாது—அச்சுய ஆராய்ச்சிச்சக்தியொன்று நம்மிடத்தில்* இருக்கின்றதென்பதைக்கூட மறந்து—பற்பல வகைகளில் புறவுலகத்தையும் அதன்கண்உள்ள சக்திகளையும்பற்றி ஆராய்ந்து ஆராய்ந்து, கடல் மீதுஆணைசெலவும் காயகல்பந் தேடியும் இரஸவாதவித்தைக்கும் அலைந்து, நான்நான் எனத் தருக்கியே ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றிக் குழம்புவோர் மதியையும் வினையையும் என்னென்று சொல்லிவியப்பதென அறிகிலேம். திமிங்கலத்தால் விழுங்கப் பட்டோன் ஒருவன் அவ்விலங்கின் குடலமைப்பை ஆராய்வதுபோலாம் இன்னவர் செய்யும் ஆராய்ச்சி எல்லாம். தீயை மிதித்தவன் குதிப்பதைக் களிநடம் புரிதலெனக் கொள்வதுபோலாம், இவர்கள் களிப்பதுபோல் தோன்றுகின்ற தோற்றங்களெல்லாம். இந்நிலையை ஷெல்லியென்னு மாங்கிலப்புலவர் "This mad unrest which men miscall delight" என்று நன்கு கூறினர். மதக்களிற்றால் தூக்கி எறியப்பட்டோன் அடையும் முன்னேற்றமே இப்புறவுலவாழ்க்கையில் வாய்க்கும் முன்னேற்றங்களெல்லாம்.

OFFICE OF THE REGISTRAR 3- 1929 MADRAS

அப்பர்

6. அப்பர் தேவாரமும் அதன் காப்பிய விலக்கணமும்

724பக்கத் தொடர்ச்சி

மேல்நாட்டு நாகரீகத்தில் புராதன கிரீக்கர் முதனூலாகக் கொள்ளப்பட்டன. ஹோமர் எழுதிய இலியட், ஒடிஸீ என்னும் காப்பியங்களாம். ரோமாபுரியிலும் முதனூலெனக்கொண்டது ஈநியட் என்னும் காவியமே. கிறிஸ்தவர்கள் வேதநூலும் ஆங்கிலத்தில் மில்டன் காவியமாகவே எழுதினர். நமது தேசத்திலும் ஆரியத்தில் வால்மீகியும் தமிழில் கம்பரும் எழுதிய இராமாயணம் ஒப்பற்ற காவியமென்பர் மேலோர். ஆதலால் பலவகை வித்தாரகவிகளிற் சிறந்ததாய் எடுக்கப்பட்டது பெருங் காவியமன்றோ?

திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் * காப்பியமோவெனில், வெளிப்படையில் காவியம் அன்றெனவே தோன்றும். ஏனெனில் "சந்தியிற்றொடர்ந்து சருக்கம் இலம்பகம், பரிச்சேதமென்னும் பான்மை" யில் காணப்படாமையால், தொடர்ச்சியாய்ப் பகரும் யாதொரு கதையும் அதிலில்லை. கதாநாயகனை கோமகன் "மந்திரம், தூதுசெலவு, இகல்வென்றி" யிவைகள் நடத்துவதும் காணப்படவில்லை. கதாநாயகன் பிறப்பு, இளமை, கல்வி, யௌவனம், விவாகம், மக்கட்பேறு முதலியனவும் காணப்படவில்லை. ஆகையால் காப்பியவிலக்கணம் தேவாரத்தில் யாதொன்றும் காணப்படவில்லை யென்றே கூறல் வேண்டுமன்றோ?

பெருங் காவியத்திற்கு மேலோர் விதித்த விலக்கணத்தைச் சற்று ஆராய்வோம்.

தண்டியாசிரியர்.

"பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவ
மிருசுடர் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப" என்றார்.

—பொதுவணியியல் - 8

இவ்வாறு கூறப்பட்ட பெருங்காப்பிய அம்சங்களை முறையே ஆராய்வோம்:—

வாழ்த்து வணக்கம்:—தேவாரம் பெரும்பாலும் வாழ்த்து வணக்கமேயாம். ஆயினும் சில பதிகங்கள் நித்தியானுசந்தானமாய் வாழ்த்துவணக்கமாய்க் கையாளக்கூடியன உள. அவை, தசபுராணம், பாவநாசத் திருப்பதிகம், திருவங்கமாலை, உள்ளத்திருக்குறுந் தொகை, பலவகைத் திருத்தாண்டகம், நின்ற திருத்

* யாப்பை யியம்பிடின் முத்தகமோடு குளகந்தொகை
காப்பிய மாமுத் தகன்பொருளோர் கவியின் முற்றும்
வாய்ப்பிற் குளகம் பலபாட்டொருவினை மன்னுதொகை
கோப்பிற் பொருளன காப்பிய மாநூல் கொடியிடையே!

—வீரசோழியம்-அலங்காரப்படலம். 36.

தாண்டகம், தனித்திருத்தாண்டகம் முதலியன. அவற்றில் ஒரு உதாரணம்:—

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாயா றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
யென்னானா யென்னானா யென்னி லல்லா
லேழையே னென்சொல்லி யேத்துகேனே ?

—தனித் திருத்தாண்டகம்-7

மேற்கூறிய பாசுரமானது, வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், தேவாரமுற்றும் உரைக்கும் பொருள் இதுவென்று உணர்த்தல் ஆகிய மூன்றும் பெற்று விளங்காநின்றது. "நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி" * என்பதில் முறையே அறம், பொருள், இன்பம், வீடு என்பதைக் காண்போம்.—

அறம்:—

இரப்பவர்க் கீயவைத்தார் ஈபவர்க் கருளும்வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்
பரப்புநீர்க்கங்கைதன்னைப்படர்சடைப்பாகம்வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தா ரையனை யாறனாரே.

— திருவையாறு -- திருநேரிசை —10.

[குறிப்பு:—அடியார்கள் கடமை ஈதல் என்றும் அது தவறினால் கடுநரக மென்றும், ஈபவர்க்கருளென்றும் கூறிப்பின்னர்ப் பெருமானும் கங்கையைச் சடையிலேற்றியதும் கூறப்பட்டது. இச்செய்கையும், இராவணன் கைலையில் சிறைப்பட்ட பின்னர்ப் பாவிய பாடல் கேட்டு அவனுக்குப் படைகொடுத்தருளியதும் அறமெனப் படுவதன்றோ ?]

பொருள்

அப்பனீ யம்மைநீ யையனுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
யொப்புடைய மாதரு மொண் பொருளுநீ
யொருகுலஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ
யிப்பொன்னீ! யிம்மணிநீ! யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வ நீயே

தனித்திருத்தாண்டகம்-1.

[பொருள் இருவகைத்து-உயிரற்ற சங்கமப் பொருள்களும் உயிருள்ள ஸ்தாவர ஜங்கமங்களுமாம். சுற்றமும் துணைவரும், மனையாளும் சிறந்த பொருள்களென்பர்]

இன்பம்

நிலைப்பாடே நான்கண்ட தேடீ கேளாய்
நெருநலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து
கலைப்பாடுங் கண்மலருங் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவே னெங்கும் காணேன்
சலப்பாடே யினியொருநாட் காண்பே னாகிற்
றன்னாகத் தென்னாக மொடுங்கும் வண்ண
முலைப்பாடே படத்தழுவிப் போக லொட்டேன்
ஒற்றியூ ருறைந்திங்கே திருவா னையே

திருவொற்றியூர் - திருத்தாண்டகம் - 8.

வீடு

நற்பதத்தார் நற்பதமே ! ஞானமூர்த்தி !
நலஞ்சுடரே ! நால்வேதத் தப்பா னின்ற
சொற்பத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலா யிதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையில்லா நெஞ்சந் தன்னு
ணிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே ! யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே.

—தனித்திருத்தாண்டகம் - 4

தன்னிகரில்லாத் தலைவன்

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி யத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையு ஞாயிறுந் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தி னின்ற
விரதங்க ளுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிக ணின்றவாறே.

—நின்ற திருத்தாண்டகம் - 5

மலை

கந்தமாதனங் கயிலை மலைகே தாரங்
காளத்திக் கழுக்குன்றங் கண்ணா ரண்ணா
மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப்பத
மகேந்திரமா மலைநீல மேம கூடம்
விந்தமா மலைவேதஞ் சைய மிக்க
வியன்பொதியின் மலைமேரு வுதய மத்தம்
இந்துசே கரனுறையு மலைகண் மற்று
மேத்துவோ மிடர்கெடநின் றேத்து வோமே.

—திருஅடைவு திருத்தாண்டகம் -9

கடல் (பாற்கடல்)

பருவரை யொன்றுசுற்றி யரவங்கைவிட்ட
விமையோரிரிந்து பயமாய்த்
திருநெடு மால்நிறத்தை யடுவான்விசும்பு
சுடுவானெழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றிதற்கோர் பதிகாரமொன்றை
யருளாய்பிரானே யெனலும்
அருள்கொடு மாவிடத்தை யெரியாமலுண்ட
வவனண்டரண்ட ரரசே.

—தசபுராணம்-பண்-பழம்பஞ்சரம்-1

கடல் (உருவகம்)

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா
துனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே

— திருவொற்றியூர்-திருநேரிசை-2.

கடல் (உவர்க் கடல்)

நரையார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
யுரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
வெம்மடிக ளும்மூர்தா னேதோ வென்ன
விரையாதே கேட்டியேல் வேற்க ணல்லாய்
விடுங்கலங்க ணேங்கு கடலுள் நின்று தோன்றும்
திரைமோதக் கரையேறிச் சங்க மூருந்
திருவொற்றியூ ரென்றார் தீய வாறே.

— திருவொற்றியூர் - திருத்தாண்டகம் - 4.

சொல்லக் கருதிய தொன்றுண்டு
கேட்கிற்றொண் டாயடைந்தா
ரல்லற் படக்கண்டு பின்னென்
கொடுத்தி யலைகொண்முந்நீர்

* அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்னும் நான்கும் பயந்த நடையெனினும் பொருந்தும்.

மல்லற் றிரைச்சங்க நித்திலங்
கொண்டுவெம் பக்கரைக்கே
யொல்லைத் திரைகொணர்ந் தெற்றேற்றி
யூருறை யுத்தமனே.

திருவொற்றியூர் - திருவிருத்தம் - 2.

நாடு * பொது (உலோகாயத நாடு)

கேடு மூடிக் கிடந்துண்ணு நாடது
தேடு நீர் திரியாதே சிவகதி
கூடலாந் திருக் கோலி யீசனைப்
பாடு மின்னிர வோடுபக லுமே.

—திருக்கோளிலி - திருக்குறுந்தொகை - 9.

சிறப்பு

மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடு நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளி யுளான்கழல் சேர்மினே.

—திருக்காட்டுப்பள்ளி - திருக்குறுந்தொகை - 2.

நகர்

அருமணித்தடம் பூண்முலை யரம்பையரொ டருளிப்
உரிமையிற் றொழுவாருருத்திரபலகணத்தார் [பாடியர்
விரிசடைவிரதிக ளந்தணர் சைவர் பாசுபதர் கபாலி
தெருவினிற் பொலியுந் திருவாரூ ரம்மானே [கள்

—திருவாரூர்-பண்-சீகாமரம்-3-.

பருவவர்ணனை

வளர்பொறியாமைபுல்கி வளர்கோதைவைகி
வடிதோலும்நூலும் வளரக்
கிளர்பொறிநாகமொன்று மிளிர்கின்றமார்பர்
கிளர்காடுநாடு கிழவர்
நளிர்பொறிமஞ்ஞையன்ன தளிர்போன்றுசாய
லவள்தோன்றுவாய்மை பெருகிக்
குளிர்பொறிவண்டுபாடு குழாலாளொருத்தி
யுளள்போல்குலாவி யுடனே. (4)
உறைவதுகாடுபோலு முரிதோலுடுப்பர்
விடையூர்வதோடு கலனா
இறையிவர்வாழும்வண்ண மிதுபோலுமீச
ரொருபாலிசைந்த தொருபால்
பிறைநுதல்பேதைமாத ருமையென்னுநங்கை
பிறழ்பாடநின்று பிணைவா
னறைகழல்வண்டுபாடு மடிநீழலாணை
கடவாதமா ருலகே (5)
மலைமடமங்கையோடும் வடகங்கைநங்கை
மணவாளராகி மகிழ்வர்
தலைகலனாகவுண்டு தனியேதிரிந்து
தவவாணராகி முயல்வர்
விலைபிலிசாந்தமென்று வெறுநீறுபூசி
விளையாடும்வேத விகிர்த
ரலைகடல்வெள்ளமுற்று மலறக்கடைந்த
வழல்நஞ்சமுண்ட வவரே (9)
புதுவிரிபொன்செயோலை யொருகாதொர்காது
சுரிசங்கநின்று புரள
விதிவிதிவேதகீத மொருபாடுமோத
மொருபாடுமெல்ல நகுமான்
மதுவிரிகொன்றைதுன்று சடைபாகமாதர்
குழல்பாகமாக வருவர்
இதுவிவர்வண்ணவண்ண மிவள்வண்ணவண்ண
மெழில்வண்ணவண்ண மியல்பே !

—சிவனெனு மோசை - பண் - பியந்தைக்காந்தாரம்.

* சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகமான நாட்டுத் தொகையை நோக்குக.

குலசேகரர்

[726வது பக்கத் தொடர்ச்சி]

பிறவி வேண்டுந் துறவி.

மின்னனைய நுண்ணிடையார்
மேனகையோ டுருப்பசியும்
அன்னவர்தம் பாடலோ
டாடலவை யாதரியேன்
தென்னவென வண்டினங்கள்
பண்பாடும் வேங்கடத்தே
அன்னனைய பொற்குவடாம்
அருந்தவத்தேன் ஆவனே. 6.

[மின் - மின்னல்; அனைய - ஒத்த; நுண் - சூக்ஷ்மமான - மிகச்சிறிய ; இடையார் - இடையை உடைய பெண்கள் ; அன்னவர் - ஒப்பானவர், ஆதரியேன் - விரும்பேன்; தென்ன என - ஒலிக்குறிப்பு, அன்னனைய - அதற்கு அஃதே ஒப்பான]

போற்குவடாம் அருந்தவம்

காடடர்ந்த மலைமீது காட்டுத்தீயானது கடுகக் கனன்று எரியுமாதலின் இப்புதர் பலவும் பொசுங்கிப் போகுமன்றோ? ஆதலின், உயிருள்ள நிலைத் திணைப்பொரு ளாகாது உயிரிலாத நிலைத்திணைப் பொருளாம் கல்லாக மலைமேல் கிடப்பின் அதுவே பெரும் பேறும். மலையொடு மலையாய், அதிலொரு குவடாதலும் இறைவனோடு ஒன்றுபடுதலாம். உயர நிற்கும் அதனிலும் உயர்நிலையாவது யாது ? நுண்ணிதாய் முடிந்த அறிவுநிலை யன்றோ அஃது. அப்பொற்குவடோ அன்னதே அனையது. அதற்கு அஃதே ஒப்பாவதல்லது வேறொன்றும் இணையாவதில்லை. உலக முதல்வனின் இருப்பிடமாய மலை இன்ப இருப்பேயாகும். அதற்கு ஒப்பிருப்பின், உண்மையறிவின்பமான பொருள் ஒன்றன்றிப் பலவாகும். பலவாய போது ஒருபொருளும் உண்மையறிவின்ப வடிவினதாகாது. ஒருபொருள்உள்ள இடத்தில் ஒரே பொழுதில் மற்றொருபொருள் இருத்தல் இயலாது. ஆதலின் ஒருபொருள், மற்றையபொருள் அளவில் உண்மைகுறைந்து விளங்கும்; எங்கும் உள்ளபொருள் என இயம்புதற்கில்லை. அன்றியும், இரண்டு என்ற இடத்தே மனவுரிமைக்கேற்ற மனமாறுபாடு உண்டு; அச்சமும் துன்பமும் அங்கே பிறக்கும். ஆதலின் இன்பம் இல்லையாம். ஒருவாது உள்ளத்தறிவினை மற்றொருவர் அறிதல் இயலாமையின், அறிவும் அந்நிலையில் குறைபடும். ஆதலின் உண்மையறிவின்ப வடி

வான நிலை ஒப்பற்றதேயாம். வேங்கடமென்பது முன் கூறியபடி மாலுலகமெனும் ஓர்உயர்நிலையைக் குறித்தலின் அதற்கு ஒப்புயர்வு இல்லையன்றே! அம் மாலுலகே நம்பொருட்டு மலையுருக் கொண்டாற் போல்வது இயற்கையழகு மிக்க வேங்கடமலை. ஆதலின் அம்மலையின் குவடுஆதலினும் அருந்தவப்பேறு வேறுண்டோ ?

தென்னென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடம்

தென்ன தென்ன என இயற்கையொலியோடு இசைகூட்டித் திரியும் வண்டினங்கள் அறிவுமலையில் வாழ்தலின்பயனைப் பொருள்நிறைந்த பாடலைப் பண்ணொடு மியையப் பாடுகின்றன. தென்ன என்பதற்குத் தென்னுடையவன் என்பதன்றே பொருள். தமிழ்நாட்டின் எல்லையாகிய வட வேங்கடத்திலே வாழும் வண்டுகள் அச்செருக்கால், தமிழ்நாட்டுத் தமிழ்க் கடவுளாய்த் தமிழர்க் கருள்செய்யும் தகுதி நோக்கி (திருவாதவூரர் "தென்னுடைய சிவனே போற்றி,' என்று பாடியதுபோல) தென்னுடைய திருமாலே எனப் பாடுகின்றன. அன்பர் திருச்செவிக்கு அவ்வொலியும் அத்தகைய உயரிய பாடலாகக் கேட்கின்றது. அவ் விசையின்பத்தாலே மண்மலையும் பொன்மலையாகப் பொலிவுறுகின்றது.

இவ்வாறு மண்ணும் பொன்னாகப் (பொலிவு) பாடியாடும் வண்டுகளின் பாடலைக்கேட்டு மண்ணுடலைப் பொன்னுட லாக்காது புலையுடலிற் புகுந்தலைந்து பொன்னாட்டிற்போய் வானரமகளிரின் பொருத்தமிலா ஆடலும் பாடலும் கேட்டுமகிழ விரும்புதலும் அறிவுடையோர் செய்கையோ ?

ஆடலும் பாடலும்

பெண்களின் பேரழகும் பெருமானின் இன்பநிலையைக் கண்ணெதிரே காட்டுகின்றது. எவ்வுலகினரும் எம்மொழியினரும் இயற்கையில் அறிந்து துய்க்கும் வகையில் இறைவனது இன்பவடிவமாய்த் தோன்றுவன ஆடலும் பாடலுமே யாம். இறைவனன்றே அந் தமிழின் இன்பப்பாடல். ஆனால், இவை இறைவன் இன்பத்தை நினைப்பூட்டாதபோது இடும்பையே தருகின்றன. செந்தீ நமக்கு அடிசிலையும் அமைத்துதவுகின்றதும்சிறிதுசோர்ந்தால் உடலையும் எரித்துவிடுவதுமாகின்றது. அது தீயின் தீமையன்று; அஃது அத்தீ நின்ற நிலையைப் பொறுத்தது. அதுவேபோலப் பாடலும் ஆடலும் அழகும் இன்பமும் நின்றநிலையை நோக்குதல் வேண்டும்.

மின்னனைய

இவ்வுலகில் நமக்குத் தோன்றும் அழகும் அறிவும் விரைந்து மின்னல்போன்று விளங்கிஎழுந்து மறைகின்றன. பெண்கள் அழகும், நம் கண்கள் மின்னிப் போமாறு விளங்கி மனத்துள் மறைகின்றது. ஆடல் பாடலின் அருங்கருத்தும் அவ்வாறே மின்னல் போன்று விளங்கி மறைகின்றது. இவை மின்னி மறையாது எப்போதும் பேரொளியாக விளங்கி நின்றால் கடவுணிலையை அடைந்தவராவோம். விரைந்து குதித்தாடும்போது அவ்வழகிய ஆட்டக் குறிப்பும் விரைவினால் மின்னல்போல விளங்கித் தோன்றுகின்றது. பாடலினும் இசை உருள்கின்ற இன்னிலையும் இன்பமும் மின்னலெனப் பொலிவதுகேட் டின்புறுகின்றோம். [மின்னனைய என்பதனை, அண்மையில் நின்ற இடையார் என்பதோடேனும், சேய்மையில் நின்ற ஆடல்பாடல் என்பதோடேனும் கூட்டலாம் அன்றே. இரட்டுற மொழிந்து பொருள்கொள்வதும் பொருத்தமேயாம்.]

நுண்ணிடையார்

பெண்கள்மென்மையும் சாயலும் ஏரெழிலும்உடையாராய் இருந்தும் மின்னெனப் பொலியும் நுண்ணிய இடையினை உடைய பெண்கள் என்றே உலகினரால் புகழப்படுகின்றனர். இடையார்என்பது இடக்கரடக்கலாய்க் காதற்கழிவிடம் என்ற குறிப்புப்பொருள் தந்து நிற்கின்றது.

மேனகை

அருந்ததி முதலானோர் பாடல் இறைவன் வடிவினதாகும். மேனகை முதலானவரைப் போன்றவரது பாடல் காதற்குறிப்புடையதாகவே விளங்கும். அப்பொதுமகளிரிடம் கடவுளுருவாம் அழகு, அவா வடிவினதாகக் காணப்படுகின்றது. விலைபெறுத அழகினையும் பாடலையும் ஆடலையும் விற்று அவற்றைக் கொல்லும் மறவர்அன்றோ அப்பரத்தையர். அன்னோர், தம் முடலையும் ஆடலையும் சிறிதுதோன்றச் சிறிது மறைத்து மின்னிப் பொலியச்செய்து பிறரைத் தம் வலையிற் சிக்கச்செய்யும் இயல்பினர் ஆதலின் அவர்களிடத்தே அவற்றின் உண்மை யியல்பினை அறிதல் இயலாது. அவை ஒப்புயர்வற்று விளங்கினாலும் பொதுமடந்தையரது புன்மை நிலையில் நின்றமையால் இகழ்தற் குரியனவாம். மின்னலானது பேரொளியாய்ச் சிறிதுபோது தோன்றி உடனே மறைந்திட இருள் சூழ்தல்போல இப்பெண்களது அழகும் பாடலும் ஆடலும் துய்க்கும்போது பேரொளியாய் மின்னி உடனே அழிதலினால் இருளே நம்மைச் சூழ்கின்றது. அந்நிலையில் கழிவிரக்கமே கொள்கின்றோம். கடவுள் நிலையாகிய அன்புநிலையிலோ, உள்ளினும் உவகை பெருகுதலின் அங்குக் கள்ளினும் காமம் இனிதாகின்றது.

புன்மைநிலை இத்தகையது. அடியாரது ஆடலும் பாடலும், அவ் அடியார்போன்ற வண்டுகளது ஆடலும் பாடலும் இறைவன் உருவினவே யாம். ஆகவே வண்டின் ஆடல்பாடல் கண்டுகேட்டு வேங்கடத்தே பொலிவுபெறும் அழகினைக் காண்பேனே யன்றிப் பொன்னுலகமாதர் போன்றாரின் பொய்ப்பாடலையும் பொய்யாட்டலையும் கண்டு கேட்டு இன்புறுவதில்லை. அவற்றை வெறுப்பதன்றி விரும்புவது எந்நாளும் ஆகாது.

வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ்
மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும்
செல்வறியேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்
கடமலைமேன்
கானாறாய்ப் பாயும் கருத்துடையேன்
ஆவேனே. 7.

[மா - பெரிய ; மதி - சந்திரன்; மன்னவர்தம் கோன் - அரசர்க்கரசன் ; வீற்றிருந்து - பெருமையொடு இருந்து ; செல்வு - செல்வம் ; கருத்து - எண்ணம்]

கானாறு

தரையின் நடுக்கத்தினால் மலையின் குடுமிகள் பெய்த்துக்கொண்டு போதல்கூடும். பொன்மலையின் நின்றும் முக்குடுமிக் குன்றம் சிதறுண்டு காற்றில் தெற்கே

பறந்தோடிய கதை யாவரு மறிந்ததொன்று. அன்றியும், கல்வேண்டுவார் வெட்டி எடுத்தும் போவர். இவ்வாறு அழிதல் ஒருபுறமிருக்க, உயரக்கிடந்தால் ஒருவர்க்கேனும் பயன்படுதல் கூடுமோ? பயன்படவேண்டுமானால் கானாறாக மக்களையும் மாக்களையும் தேடி விரைந்தோடி மேலிருந்து கீழிழிந்து வருதல் வேண்டும்.

மதிபோல் மன்னவர்கோன்

இவ்வாறு எல்லோருக்கும் உதவுவதை ஒழித்து நாட்டில் பலரும்காண உலகத்திற்கொருவன் எனச் செருக்கிநின்று, திங்கள் போன்றதொரு வெண்கொற்றக் குடைக்கீழ் உலகினை யாண்டுவருதலால் ஒருபயனுமில்லை. முற்றும் வளர்ந்த பெருந்திங்கள் வானுக்கு ஒருவனாய் நின்று பல வான்மீன்களின் ஒளியையும் ஒடுக்கி விளங்குகின்றான். இஃதேபோல, மன்னவனும் பல சிற்றரசர்கள்சூழ அவர்களது தலைவனாக வீற்றிருத்தலும்கூடும். அதனால் ஆய பயன்என்னை; திங்கள் வானை யாள்வதும் ஒரு தோற்றமேயாம்; அஃது என்றுமில்லையாம். அதுவேயுமன்றிப் பல வான்மீன்கள் திங்களினும் பெரியனவாய் உண்மையில் இருப்பினும் அவை நமது யருகாமையில் இல்லாமையால் சிறியவையாய்த் தோன்றுகின்றன. அதுவேபோல, உலகிலும், அடியவர் முதலானோர் வெளிப்பகட்டின்றி உள்ளடங்கி நிற்கின்றனர். அவர்க்கெல்லாம் அரசனாக ஒருவன் வீற்றிருப்பது அவனுடைய பெருமையைக் குறிக்காது அவனது பொய்ம்மையினையும் வெற்றாரவாரத்தினையும் குறிக்கின்றது. நிறைந்த திங்கள் குறைந்தும் மறைந்தும் போவதுபோலவே இவ்வரசர்களது வீறும் குறைந்து மறைந்து போவதாம். யானே ஒரு கோனாக வீற்றிருந்தும் இதனை ஒரு கொண்டாடத்தக்க செல்வமாக என்றும் அறிந்ததில்லை. போற்றிகள் பலர் இதனைப் புகழ்ந்துகொண்டாடுவது, செல்வமாய அஃது, அவர்கள் வாயில் நீருறத்தித்திப்பதாலே என்பதன்றி உண்மையறிந்தனர் என்பதில்லை.

பாயும்

தன்னலம் பாராட்டிப் பிறரை அடிமையாக்கிப் பொய்வாழ்வு வாழ்வதைவிட நாட்டைவிட்டுக் காட்டில் புகுந்து, வலக்கையிடுவது இடக்கை யறியாதபடி மறைந்துநின்று மக்களுக்கு உதவுவது உண்மை வாழ்க்கை எனஉணர்ந்து காக்கும் கானாறாய்ப் பாய்வேன். அரசனைப்போல வீற்றிருத்தலைவிட்டுக் காட்டில் வாழும் எளியார்க்கும் எளிவந்து விரைந்து மறைந்து ஓடிப் பயன்பட விரும்புவேன்.

கருத்து

அழகிய வேங்கடமலைமேலே திருமலையோடு தொடர்புபெற்றுத் தேனார்பூஞ்சோலை இடையே ஓடுவதைவிட உயரிய இன்பம் வேறு ஒன்று உண்டோ ? சொல்லும் செயலும் உள்ளத்தின் வழியதாதலின் இவ்வெண்ணம் எனக்குண்டாயின் அதுவே பெரும்பேறாகும். திண்ணிய எண்ணமானால் எண்ணிய எண்ணியாங் கெய்துமன்றோ.

பிறையேறு சடையானும் பிரமனும்
மிந்திரனும்
முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான்
மறையானான்
வெறியார்தண் சோலைத் திருவேங்
கடமலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே
னாவேனே. 8.

[வேள்வி - யாகம்; குறை முடிப்பான் - இடர்தீர்த்தலும் வேண்டியது தருதலும்; மறை - வேதம்; வெறி - வாசனை; நெறி - வழி]

நெறி

கான்ஆறு வற்றிக் கானலாய் மாறலாம். அப்போது அது யாருக்குப் பயன்படும். ஆதலின் கானாறுதலை விட எல்லோரும் நடந்து செல்லும் வழியாதல் மாண்புடையதாகும்.

பிறையேறு சடையான்

உலகில் உயர்நிலைமையில் நின்றவர் யாவர்? நோன்பு நோற்றுப் பெரும்பேறு பெற்றுத் தானழியாதிருத்தலோடு, தன்னை அடைந்தாரும் அழியாவகையில் தவநெறிநின்றவன் ஒரு தொல்லைப் பெரியோன். அவனுடைய சிக்குத்தலை அவனது தவப்பொலிவைக் காட்டி நிற்கின்றது. அழியா இளம்பிறையோ அவனையடைந்தார் என்றும் இளையாராய் இருத்தலைக் குறிக்கின்றது.

பிரமன்

கல்வியிற் பெரிய மூதறிஞனும் உலகில் உயர்ந்தவனே அன்றோ ?

இந்திரன்

செல்வத்திற் சிறந்த திருவாளனே பலர் நேரிற் காணும் கடவுள். செல்வமுடைமையாலன்றோ அவன் இந்திரன் எனப் பெயர்பெற்றான்.

குறையாய வேள்விக்குறை முடிப்பான்

உயர்நிலை நின்றவர் உலகினிற்கு உதவுகின்ற நிலையில் அன்றோ பெரியோர் எனப் புகழப்படுகின்றனர். எனவே இம்மூவரும் உயர்நிலையில் நிற்பதற்கேற்ப முறையே, நோன்பு, கல்வி, செல்வம் என்றவகையால் உலகிற்கு உதவுவர் அன்றோ? பிறர்க்குதவும் நிலையே பெருநிலையாகும். உதவி என்னும் வேளாண்மையில் ஐம்பெரு வேள்வியும் அடங்கும். அதுபற்றியன்றோ அவ்விடத்தே "வேள்விப்பயன்" என்ற சொற்றொடரை வள்ளுவர் பயன்படுத்திக் கொள்கின்றார். வேள்வியிற் பெரிய வேளாண்மை செய்தொழுகும்போது முற்றிய நோன்பும், முற்றிய கல்வியும், முற்றிய செல்வமும் இறைவனிடத்தன்றி எம்மிடத்தில்லை என இரங்குகின்றோம். ஆதலின், அங்கு நேரும்குறைகளை எல்லாம் குறைவிலா நிறைவாம் இறைவனே முன்னின்று முடித்தல்வேண்டும்.

மறையானான்

ஆனால் தோன்றாத் துணையாக மறைவாய் நின்றன்றோ நம் குறையை முடிக்கின்றான் அவன். உயிர்கள் தாமே தொழில்புரிந்து முன்னுக்கு வரவேண்டுதலின், தானே எதனையும் நேரில் செய்யாது, பின்னின்று அவர்களே ஆகியும் அவர்களை ஏவிவிட்டும், மறைந்து நிற்கின்றான்.

குறைமுடிப்பான்

அன்றியும் எப்பொருளும் இறைவனே யன்றோ ? அந்நிலையில் எச்சொல்லும் அவனையே குறித்தல் வேண்டும். திருமறையின் ஒலிவடிவும் திருமாலின் வடிவமேயாகும். இந்திரன் முதலியோரது பெயர் அத்திருமறையில் பயின்றுவரினும் அம்மொழிகளனைத்தும் முதல்வனையே குறிக்கின்றன. ஆகவே அத்திருப்பாட்டுகளின் பயனைத் தருபவனும் ஆண்ட

வனே யாகும். இவனே எதனையும் இயற்றியருளு பவன். இந்திரன்முதலியோரை முன்னிட்டு இயற்றப் படும் பெரிய வேள்விகள், வேள்விவேட்டோர் விரும் புவனவற்றைத் தந்துதவி, வெறுப்பனவற்றை நீக்கி யருளுகின்றன; இறைவன் பறை ஒலியாய் நின்று எல்லாமாய் விளங்கும்போது, பிறருடைய பெயர் கொண்டு செய்த வேள்வியும் இவனையே சார்தலின் இவனே பயன் தருகின்றான்.

குறை முடிப்பான்

அன்றியும், எல்லோரிலும் சிறந்து விளங்கும், இந் திரன் முதலியோர் இயற்றும் வேள்விகளுக்கும் இவனே பயன் தருவோன். தம்மை நோக்கிப் பலர் வேள்வி வேட்கச் சிறந்துநின்ற பெரியோர் எனப் பெயர்பெற்றவர்கள்எல்லாம் தம்குறைமுடிய இவனை நோக்கி வேள்வி வேட்கின்றனர்.

இந்திரன் முதலிய அனைவரும் உலகினர் செய்யும் வழிபாடனைத்தும் இறைவனைப்போ யடைதற்கு ஒரு வழியாக விளங்குகின்றனர். அவனை யன்றி அவர் களுக்கென ஒரு தனிச் சிறப்பும் இல்லை.

நெறி

அத்தகையோரும் ஒருவழியேயாகி நின்றபோது, யானும் ஒருவழியாக ஏன் ஆதல் கூடாது. அவர் களோ, தாம் ஒருவழி என்பதை மறந்து உயர்ந்தோர் எனச் செருக்கித் திரிகின்றனர். யானோ அச்செருக் கென்பது சிறிதுமின்றி மலைவழியாகக் கிடப்பேன். இஃதே பெருவாழ்வாகும். இஃதே நிலைப்பேறான தொரு பெருஞ் செல்வமாகும்.

பூம்பொழிற் சோலையின் புதுமணத்தைப் புனைந்து ரைக்கப்போமோ? உள்ளே புகுந்தால் உள்ளமுமுட லும் குளிருமாறு உள்ளூறக் குளிர்ந்திருக்கும் ஒப் பற்ற நிலையினை உரைத்தலாகுமோ? பிறவி வெப்பத்தி னின்றும் நீங்கிப் புகுவதற்குப் பேரின்பப் பொழிலா வது ஈதே யன்றோ?

தமிழ்ப் பாடம் 90.

[அஷ்ட பிரபந்தம்.]

[730-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத்துமாலை.

மாயிரு ஞாயிறு பாரதப் போரின் மறையவங்கன்
பாயிரு ணீதந்த தென்னகண் மாயம் பவளநெற்றிச்
சேயுயர் மாமதில் சூழரங் கேச திரண்டுதித்த
வாயிர கோடி திவாகரன் போலொளிராழிகொண்டே.

பதப்பிரிவு:—மா இரு ஞாயிறு பாரதம் போரில் மறைய அங்கன் பாய் இருள் நீ தந்தது என்ன கண் மாயம் பவளம் நெற்றி சேய் உயர்மா மதில் சூழ் அரங் கம் ஈச திரண்டு உதித்த ஆயிரம் கோடி திவாகரன் போல் ஒளிர் ஆழி கொண்டே.

அன்வயம்:—பவளம் நெற்றிச் சேய்உயர் மாமதில் சூழ் அரங்கேச, திரண்டு உதித்த ஆயிரம்கோடி திவா கரன்போல் ஒளிர் ஆழிகொண்டு, மாயிரு ஞாயிறு மறைய அங்கன் பாரதப்போரில் பாய்இருள் நீ தந்தது என்ன கண்மாயம்.

பதவுரை.

பவளம் -- பவளத்தாலாகிய, நெற்றி -- உச்சியை உடைய, சேய் - தூரத்தில், உயர் - உயர்ந்த, மா - பெரிய, மதில் - மதில்கள், சூழ் - சூழ்ந்த, அரங்கம் - திருவரங்கத்தில் இருக்கின்ற, ஈச - ஈசனே,

திரண்டு - ஒன்றாகச்சேர்ந்து, உதித்த - உதயமான, ஆயிரம் கோடி - ஆயிரம் கோடி, திவாகரன்போல் - சூரியர்களைப்போல், ஒளிர் - பிரகாசிக்கின்ற, ஆழி கொண்டு - உன் சக்ராயுதத்தைக் கொண்டு,

மா இரு - மிகவும் பெரிய, ஞாயிறு - சூரியன், மறைய அங்கன் - மறையும்படி, நீ - நீ, பாய் - சூழ் கின்ற, இருள் - இருளை, பாரதப்போரில் - பாரத யுத்தத்தில், தந்தது - உண்டாக்கியது,என்ன - என்ன, கண்மாயமோ-கண்கட்டுவித்தையோ! (இயம்புவாய்.)

விரிவுரை:—" என் மைந்தன் அபிமன்யுவைக்கொ ன்ற சயத்திரதனை, நாளைச்சூரியன் அத்தமன மாவ தற்குள் நான் கொல்லேனாகில், நெருப்பிலே விழுந்து மாள்வேன்" என்று அர்ச்சுனன் பதின்மூன்றாம் நாள் போரின் இறுதியில் சூளுரைத்துச் சிவபிரானை வணங்கி வரம்பெறுமாறு கிருஷ்ணனுடன் அவ்விரவு கயிலைக்குப் போயிருக்கவும், தருமன், விறல்நெறியா வது பொய்யிலது என்னும் கொள்கையால் பீமன் மகன் கடோற்கஜனைக் கொண்டு இச் செய்தியைத் துரியோதனனுக்குத் தெரிவித்துவிட்டனன். ஆகை யால் மறுநாள் யுத்தத்தில் அவன் சயத்திரதனை ஒளி த்துவிட அர்சுனனுக்குஅவனைக்கொல்லஇயலவில்லை; பொழுதுபட இன்னும் சிறிது நேரமே இருந்தது; அதற்குள் சயத்திரதனைக் கொல்லானாகில் சபதத்தின் படி அர்ச்சுனன் தீயில்விழுந்து உயிர் துறக்கவேண் டியவனாவான். மாமாயனாய கண்ணன், ஒருவரு மறி யாமல், பனையளவு இருக்கும்போதே சூரியனைத் தன் சக்ராயுதத்தால் மறைத்துவிட்டான். இருளும் சூழ்ந் தது.தனஞ்சயனும் தன்சபதப்படிஎரியில்விழுவதற்கு ஆயத்தமானான். இனித் தனக்கொரு பயமில்லை என்று துணிந்த சயத்திரதன், அர்ச்சுனன் சாவதைத் தன் கண்களால் கண்டு களிக்கவேண்டி மறைவிடம் விட்ட கன்று தீயில்விழுந்தறுவாயிலிருந்த அர்ச்சுனனுக்கு எதிரில் வந்து நின்றான். உடனே, கிருஷ்ணன் சூரி யனை மறைத்திருந்த தன் சக்கிரத்தை விலக்கிவிடப் பகற்பொழுது இன்னும் இருப்பது கண்டு அர்ச்சு னன் தன்எதிரில் எளிவந்து நின்ற சயத்திரதனை ஒரு பாணத்தால் கொன்றனன். இது பாரதக்கதை. இக் கதையின் குறிப்பைவைத்துக் கவி இச்செய்யுளைப் பாடி யுள்ளார்.

"பாரதப் போரில் நான் படை எடேன்" என்று துரியோதனனுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தும் கிருஷ்ணன் இவ்விதம் தன் சக்கிரத்தை உபயோகப் படுத்தியது நீதியோவென்று சிலர் சந்தேகப்படுவதும், வாக்குப் பிறழ்ந்தாவது கண்ணன் தன்னை அண்டின வரும் தன்னுடைய உயிரிற்கு உயிரானவருமாய

பாண்டவர்களைக் காத்த அருளை இது காட்டுகின்ற தென்று இச்செய்கைக்குச் சிலர் சமாதானம் கூறுவ தும் உண்டு. பிள்ளைபெருமாள் ஐயங்கார் இப் பொழுது இவ்விஷயத்தைப்பற்றி இங்குக் கருத வில்லை. இருண்ட பொருளால் ஒளியை மறைப்பது முறையாயிருக்க, ஆயிரங்கோடி சூரியப் பிரகாச முடைய சக்ராயுதத்தால் சூரியனை மறைத்ததும், உல கத்தில் இருள் பாயும்படி செய்ததும் எவ்வாறு? இது என்ன இந்திரசாலம்! என்று இச்செயலின் அதிசயத்தையே இங்குப் பாராட்டுகின்றார்.

சோதித் திருவுரு வாகாய மாகச் சுருதிநன்னூல்
சாதித்து நின்று தெளிந்துவிட் டேன்மிக்க தானவரைச்
சேதித்த நேமித் திருவரங் காசங்கை தீரவுன்ற
னாதித் திருவுரு வின்பே ரணிநிற மானபின்னே. 13.

பதப்பிரிவு:—சோதி திரு உரு ஆகாயம் ஆக சுருதி நல் நூல் சாதித்து நின்று தெளிந்து விட்டேன் மிக்க தானவரை சேதித்த நேமி திரு அரங்கா சங்கை தீர உன்தன் ஆதி திரு உருவின் பேர் அணி நிறம் ஆன பின்பே.

அன்வயம்:—மிக்கதானவரைச் சேதித்த நேமித் திருவரங்கா, உன்தன் ஆதித்திருவுருவின் பேர் அணி நிறமானபின், சுருதி நல் நூல் சாதித்து நின்று, சோதித் திருஉரு ஆகாயமாகச் சங்கைதீரத் தெளிந் துவிட்டேன்.

பதவுரை.

மிக்க - மிகுந்த, தானவரை-அசுரர்களை, சேதித்த- வெட்டியழித்த, நேமி - சக்ராயுதத்தையுடைய, திரு அரங்கா - அழகிய அரங்கநாதனே,

உன்தன் - உன்னுடைய, ஆதி - ஆதியாகிய, திரு உருவின் - அழகிய உருவத்தின், பேர் - மிகுந்த, அணி - அழகிய, நிறம் - நிறமே, ஆனபின் - (அந்த ஆகாசம்) ஆகின்ற தென்பதைக் கண்டபிறகு,

சுருதி - வேதங்களாகிய, நல் - சிறந்த, நூல் - சாஸ் திரங்களை, சாதித்து நின்று - பழகியறிந்து, சோதி - ஒளி பொருந்திய, திரு அழகிய, உரு - உன்னுடைய உருவம், ஆகாசம் ஆக - ஆகாசமே என்று, சங்கை - சந்தேகம், தீர - சிறிது மில்லாமல், தெளிந்து விட் டேன் - தெளிந்துகொண்டவன் ஆயினேன்.

விரிவுரை:—எங்கு மயமாயிருக்கின்ற தன்மையி லும், அதனின்று மற்ற பூதங்கள் யாவும் பிறக்கின்ற காரணத்தாலும், பரம்பொருள் ஆகாச ரூபமாக இருப்பதாக வேதங்கள் கூறும். நீலநிறத்தினால் திரு வரங்கர் ஆகாசம் போன்றிருப்பதால் நம்கவி இவ்வரங் கரே அவ்வேதங்கள் கூறும் பரம்பொருள் என்பதைத் தெளிந்துகொண்டுவிட்டதாகப் பாராட்டுகின்றார்.

இலக்கணம்.

முன்னொருவாரம், மொழிக்கு இறுதியில் உயிர் வருவதென்றால் அது உயிர்மெய்யெழுத்தின் ஒலியா கியஉயிரொலியா யிருக்கக்கூடுமேயன்றி வரிவடிவோடு சேர்ந்து உயிராய் ஒலிக்கின்ற எழுத்தாக இருக்கமுடி யாது என்பதை விளக்கினோம். ஆனால், சில இடங்க ளில், "பைந்தொடீஇ எழுந்திரு" என்றும், "நல்ல படாஅ பறை" என்றும், "வானசைஇ யின்னு முளேன்" என்றும் செய்யுள்களில் வந்திருக்கக் காணலாம். இவைகளில், தொடீஇ, படாஅ, என மொழியில் இறுதியில் உயிர் எழுத்துக்கள் நிற்பன போன்று தோன்றலாம். ஆயினும், இ, அ, என்னும் அவ்வெழுத்துக்களுக்கு அங்கு ஒலியில்லை. அவ்வதற் கு முன் இருக்கும் ஈ ஆ என்னும் உயிர் நெடில்கள் அளபெடுத்திருக்கின்றன என்பதைக் காட்டுவதற்கு அடையாளமாக அவை வரிவடிவில் மாத்திரம் நிற் கின்றனவேயன்றி, அவை தமக்குரிய ஒலியோடு கூடிய எழுத்துக்களாகா.உயிரளபெடையின்இலக்கணத்தை முன் இவ்வால்யூம் 112-வது பக்கத்தில் காட்டியிருக் கின்றோம். பைந்தொடீ என்பதிலுள்ள ஈகாரத்தை இரண்டு மாத்திரைக்கு அதிகமாக மூன்று மாத்திரை காறும் நீட்டி இசைத்தல் வேண்டும் என்பதற்கு அடையாளமே அந்த இ, என்னும் எழுத்தாகையால், பைந்தொடீ இ,என்று இ யைத் தனித்து உச்சரிக்கப் படாது. அப்படியே, படா அ என்பதில், அ விற்குத் தனி யுச்சரிப்பு இல்லை. ஆகையால் இப்படி அளபெடு த்து இருக்கும் மொழிகளிலும் உயிரெழுத்து இறுதி யில் இருக்கின்றதென்று சொல்வதற்கு இடமில்லை.

இங்கு உரைத்தவைகளால், நிலைமொழி யிறுதி வருமொழி முதல் ஆகிய ஈரிடத்தும் உயிர் இருக்கிற சொற்கள் என்றுரைப்பதன் பொருள் விளங்கலாகும். மொழிக்குமுதலில் உயிரெழுத்துப் பன்னிரண்டும் வரும். அரசன், ஆனை, இளமை,என்பனபோல் உயிர் எழுத்துக்கள் நிற்கின்ற சொற்களைத்தான் உயிர் முதற் சொற்கள் என்று சொல்லலாம். தண்மை, காகம், பூனை என்பனபோல் உயிர்மெய் எழுத்துக்க ளால் துவக்குகின்ற சொற்களின் முதலொலி த் க் ப் என்னும் மெய்யின் ஒலிகளாதலால் அவை ஒலியைக் கருதுங்கால் மெய்ம்முதற் சொற்களாகும்.

மொழிகள், ஓரெழுத்தொருமொழி யென்றும் எழுத்துத்தொடர்மொழி யென்றும் இருவகைப் படும், என்பதை முன்னர்க் கூறியிருக்கின்றோம். ஆ (பசு), ஈ (ஒரு ஜந்து), ஊ (மாமிசம்) ஏ (அம்பு) ஐ (நுண்மை,கோழை) ஓ (மதகின் கதவு) என்று பொருள் தருகின்றபோது இவ்வேழு உயிர் நெடில் களும் தாமே பெயர்ச்சொற்களாய் நிலைமொழிளாக நிற்கலாம். அ, இ, உ, என்னும் உயிரெழுத்துக்கள், அ அரசன், இ எருது, உ ஆனை, எனச் சுட்டுப் பொருளில் இடைச்சொல்லாகியும் நிலைமொழிகளாக நிற்கலாம். எ, என்னும் வினாவெழுத்தும் எ உலகம் என, இடைச்சொல் நிலைமொழி யாகலாம். இப்படி உயிரெழுத்துக்களே பொருள்பெற்று ஓரெழுத் தொருமொழியாக நிலைமொழியாய் நிற்குங்காலையில் அந்நிலைமொழிகள் ஓரே எழுத்தா லானவைகளாத லால் உயிரை ஈற்றிலுடைய நிலைமொழி என்று சொல் வது பொருந்தாது—ஓரே உயிர் எழுத்தையுடைய மொழிக்கு முதலும் ஈறும்என்று வெவ்வேறு இருக்க இயலாதாகையால். தீ, பூ, வா, என்பனபோல் உயிர் மெய் ஓரெழுத்தொருமொழிகள் நிலைமொழியாயின், அப்பொழுது வேண்டுமெனின் ஒலியைக்கருதி, உயிரை ஈற்றிலுள்ள ஓரெழுத்து ஒருமொழி என்பது ஒருவாறு பொருந்தலாம்.

எனவே, ஆ ஈ போன்ற உயிர் ஓரெழுத்து ஒரு மொழிகளும், அ, இ, உ, என்னும் சுட்டு இடைச் சொல்லும், எ, என்னும் வினா எழுத்தும், அல்லது தீ, கை, போ, போன்ற உயிர்மெய் ஓரெழுத்து ஒரு மொழிகளும், கிளி, வந்த, பார்த்த என்றுவரும் உயி ரீற்று எழுத்துத் தொடர்மொழிகளும், நிலைமொழி

யாகவும்; அரசன் ஆணை, இதழ் ஈகை, உலகம் ஊமை எயிறு, ஏழை, ஐயன், ஒட்டை, ஓடம், ஔவியம், என்பனபோல் உயிரெழுத்தை முதலிலுடைய சொற்கள் வருமொழிகளாயும் நிற்க, இவ்விரு உயிர்களும் எவ்வாறு புணரும் என்பதற்கு விதிகள் பின் வருமாறு:—

A. நிலைமொழியும் வருமொழியும் வேற்றுமைத் தொடராயிருந்தாலும், அல்வழியா யிருந்தாலும், தொகைநிலைத்தொடரா யிருந்தாலும் தொகாநிலைத் தொடராயிருந்தாலும், எந்தத் தொடராயிருந்தாலும் சரி, பின் கூறுகின்ற விதிகள் எல்லாவற்றிற்கும் பொருந்தும். மகரமெய்யை ஈற்றிலுடைய மொழிகள் வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணருங்கால் தொடரைநோக்கி ஒவ்வொரு சமயம் கெட்டும்,கெடாமலும் வரும் என்று முன் கூறியதுபோல், இவ்வுயிரும்உயிரீறும் புணர்கின்ற விதிகளில்வித்தியாசமில்லை எனினும், நிலைமொழி உரிச்சொல்லாயின் விதி சிறிது மாறுபடலாம். அதைப் பின்னர்க் கூறுவோம்.

இவ்வுயிரும் உயிரீறும் புணர்கின்ற இலக்கணத்திற்கு, நிலைமொழி உயிர் என்னதென்று நோக்க வேண்டுமேயொழிய, வருமொழி முதலிலுள்ள உயிர் பன்னிரண்டில் எதுவாயிருந்தாலும்விதி ஒன்றுதான். எனவே, நிலமொழியாகும் உயிர்எழுத்து அல்லது நிலைமொழியிறுதியிலுள்ள உயிர், என்னதென்பதை நோக்கி அதற்கிணங்க வருமொழிமுதலில் உள்ள உயிர் புணர்கின்ற விதங்களை அடுத்தநாள் பார்ப்போம்.

அகப்பொருள் வரலாறு.

பரத்தையிற் பிரிவு

இப்படித் தலைவி அவனை ஒருவாறு மறந்தாளாயினும், நாளாகவாக அவனுக்குப் பொன்னேக்கும் பொருட்பெண்டிர் பொய்யின்பம் தெவிட்ட ஆரம்பித்தது. தெவிட்டவே அவன் பொருட்டொலைவால் இப்புறவொழுக்கம் பொல்லாதென்றறிந்தான்;மனைவாழ்க்கையின் மாண்பை உணர்ந்தான்; மகனுடைய மழலைமொழிகளைக் கேட்கவும், மார்போடணைத்து அவன் மெய்யைத் தீண்டவும், அவன் சிறுகையளாவிய அமுதை அருந்தவும் வேணவாவுற்றான். ஆயினும், தக்க தூதர்களைக்கொண்டு தலைவியின் தணியாகக்கோபத்தைச் சமனப்படுத்தி அவள் தன்னை மறுதேற்றுக் கொள்ளும்படி செய்வித்துப் பின்னரே வீட்டுக்கு மீள்வது முறைமையென்று தேர்ந்து, பாணன், விறலி, பாங்கன் முதலிய பலரை அவளைச் சமாதானப்படுத்தும் வாயில்களாக ஒருவர் பின்னொருவராக அனுப்பினான். அவர்கள் சென்று தலைவன் குணங்களையெடுத்துப் புகழ்ந்து பாராட்டியும், குற்றங்களை மறைத்துஞ் சிறிதாகக் காட்டியும், அவன் பரத்தையின் வசப்பட்டதற்குப் பொருந்தாப் பொய்க்காரணங்களை நாட்டியும், தலைவியினிடத்து அவன் மாறாத அன்பின னென்பதையும் அவ்வாறே காட்டியும், குலமகளிரொழுக்கம் இத்தகையதென்று பொதுவாகப் பகர்ந்தும், தலைவியின் கற்பு மேம்பாட்டையும்,கணவனைதெய்வந் தவமெனக்கருதும்பதிவிரதத் தன்மையையும் சிறப்பாகக் கூறியும், தலைமகனது பிழைகளைப் பொறுத்து மன்னித்து அவனை அங்கீகரிக்குமாறு வேண்டினார்கள். தலைவனது ஒழுக்கத் தவறுகளுக்கு இவர்களும் பெரிதுஞ் சிறிதும் உடந்தையாயிருந்தவர்களென அபிப்பிராயப்பட்ட தலைமகள் அவர்கள் கூறியதைக் கைதவமெனக் கொண்டு அவமதித்துக் கடிந்து அவர்களை அனுப்பிவிட்டாள்.

தம்மெண்ணம் நிறைவேறாது இவர்களெல்லாம்இவ்வாறு மீண்டுவிட, வேறு வழியொன்றுந் தேறாதிய தலைமகன் ஒருநாள் அதிகாலையில் விருந்தினராக வந்த சில பெரியோர்களை உடன் கொண்டு சென்று, பாங்கியால் தன் வரவைத் தலைவிக்குணர்த்தி மனையுட்புகுந்தான். தலைமகன்வீட்டுக்கு வந்தானெனக்கேட்டதுஞ் செவந்தகண்ணும் நெறிந்தபுருவமும், அவனுடன் வந்தவிருந்தினரை அவள் கண்டவுடன் மாறிவிட்டன. அன்னியர் முன்னிலையில் தனது மனவருத்தத்தை வெளிக்காட்டல் ஆகாதென்று, தலைவி விருந்தோம்பு முறை தவறாது அகமுவந்து முகமலர்ந்து இன்மொழிபகர்ந்து செய்கடன் யாவையுந் திருந்தச்செய்து, அடிசில் அமைத்தூட்டி, அவர்களை நன்றாய் உபசரித்தாள். இவ்வாறே அவள் அன்றும் மறுநாளும் அவர்களைச் சற்கரிக்கக்கண்ட தலைமகன் வேறெவ்வாற்றானும் விலக்கமுடியாத அவள் மனமாறுபாடு இவ் விருந்தினரால் நீங்கியதைக் கண்டு மகிழ்வுற்று அவர்கள் வந்தது தன் புண்ணியமேயென்று கொண்டாடினான்:

> கருந்தொன்று வார்குழற் கண்ணிஇல்
> வாழ்க்கையும் கையும்செவ்வாய்
> முருந்தொன்று மூரன் முறுவலும்
> கூர முகம்றியா
> விருந்தொன்றி வேறொன்றின் மீளா
> அருந்துனி மீட்கநல்ல
> மருந்தொன்று வந்திங் கனேமன
> மேயின்று வாய்த்ததுவே.

விருந்தினர் வீட்டிலுள்ளளவும் சிறிதும் வெளிப்படாதிருந்த துனி அவர்கள் அப்பாற் சென்றதும் மீண்டுங் கனன்றெழுந்தது. அஃதறியாது அடியோடு அது நீங்கிவிட்டதென்று நினைத்த தலைமகன் அன்று அவள் பள்ளியறையைச் சேர்ந்தான். சேர்ந்ததும் அவள் கண்சிவந்து புருவநெறிந்து உதடுதுடிக்க அமளியினின்றும் பதறியெழுந்து, "இப்பாயல் பல்லாரைத் தழுவிய பணைத்தோ ளண்ணலுக்குத் தக்கிலது; யானும் தாம் தழுவத்தக்கவளல்லள்; உம்மனதுக் கினியாரிடத்தே சென்று இனிதுறைந்திரும்." என்றுரைத்துச் சீறினாள். சீறலும், "சிறியோர் அறியாது பிழைசெய்திடில் அதைப் பொறுப்பது பெரியோர் கடனன்றோ? நினது பொன்னடியை எனது சென்னியிற் சூடினேன். உதைத்துத் தள்ளாது என்னை உவந்தேற்றுக்கொள்" என்று அவள் மலரடியில் விழுந்து அவன் பணிந்திரத்தலும், என் செய்வாள்? ஊடல் ஒடுங்குற்றது; செவப்பாறிக் கண் நீர்மல்கியது. உடனே அவள் அவனைக் கையாலெடுத்து, "உம் பெருமைக்கு இது சிறிதுந் தகாது.இப் பொய்க்

* ஐயவி - வெண்சிறுகடுகு.

கும்பிடை எங்கையர் கண்டால் ஆயிரம் மெய்க்கும்பிடாலும் அவர் துனியை மாற்றவொண்ணாது. அவர்களைப்போல ஊரும் பதியும் இல்லும் இனியள் அல்லேன் நான். என் தொடர்பு உமக்குத்தகாது. என்னை விட்டுவிடும்." என்று புலந்து கூறுநின்றாள். வார்த்தை கொடியதாயிருந்தாலும் மனமிளகியதைக் குறிப்பாலுணர்ந்த தலைமகன், "நான் உன்னையன்றிப் பிறரெவரையுங் காதலித்திலேன். ஆடல்பாடல்களை நயந்து அவரிடஞ் சென்றேனேயன்றி வேறு அவரை நெஞ்சாலும் விழைந்திலேன்.

> மாங்கனி யுண்டவர் காஞ்சிரங்
> காயுண வாஞ்சிப்பரோ ?
> வீங்கொளி நித்திலம் பூண்டார்
> மனவை விழைவர்கொலோ ?
> பூங்கனி காவிரி யாடினர்
> புன்கழி தோய்வர்கொலோ ?
> தேங்கனி மென்மொழி, நின்னன்றி
> யாரையுஞ் சேர்ந்திலனே.

என்றுகூறி மறுபடியும் அவள் மலரடியைப் பிடித்து வேண்டினான். அப்பொழுது மருங்கே துயின்ற மகன் துயிலெழுந்தழுது தாயிடஞ்செல்ல, அவனைத் தான் தழுவியெடுத்து மார்போடணைத்துமுத்தமிட்டுக்குலாவத் தன்னைத் தந்தையென்றறியாது அவன் தாயை நோக்கி அழுதான். அழுதகுழந்தையை அவன் கையினின்று வாங்க அவள் அருகணைதலும், முகத்தோடு முகஞ்சேர்ந்திருந்த தனையனையுங் கணவனையும் பார்த்துப்பிம்பப் பிரதிபிம்பம்போலத் தோன்றிய அவ்விருவர் முகத்தையும் மாறிமாறிப் பார்த்து மகிழ்ந்து உவகைபொங்கத் தன்னையறியாது அவள் தன் மகிழ்நனை மருவிப் புல்லினாள். நெடுநாள் மனம் வேறுபட்டுக் கலவாதிருந்த தம்மிருவரையும் இடையே பற்றுசுபோலிருந்து சேர்த்து ஒன்றுக்கிய புதல்வனை இருவரும் இருபுறமுந்தழுவி இன்புற்று மகிழ்ந்து, சோமாஸ்கந்தரென விளங்கினார்கள். அப்பொழுது அவள்

> விற்றூர் மணியணி யாய்நல் விசயவேல் வேளெனவே
> கற்றே ருறுகவி வல்லோர் புகழ்ந்திடக் கல்விசெல்வம்
> மற்றோர்முற் றும்முற்று வாழிய ரோஇன்பம் வாய்க்க [வன்பர்
> பொற்றேரென் னில்லிற் றிருப்பிய காமர் பொலி மகனே

என்று தன் காதலனை வாழ்த்தினான்.

அன்றுமுதல் அவன் புன்போகம்வேட்டுப் பாத்தையரை நாடும் புல்லொழுக்கந்தவிர்ந்து, முன்போல இன்னுயிர்க்காதலியுடனுங் காதலனுடனும் இல்லின் கண்ணமர்ந்து, இல்லறங்களை இனிதாற்றி இன்புற்றிருந்தான். இதைக் கண்டு உற்றோரும் மற்றோரும் உவந்து மகிழ்ந்தார்கள்.

ஆதியிலே தலைமகளுக்கு உயிர்த்தோழியாக இருந்தும், பின்னவளுக்குந் தலைமகனுக்கும் இடையே நின்றுதவி இருவர்களையும் மனமொன்றச்சேர்த்தும், இடையூறு நேர்ந்தகாலங்களிலெல்லாம் தக்கவுபாயங்களைச்செய்தும் உறுதிமொழிகளைக் கூறியும் அவற்றை நீக்கியும், தாய்தந்தையர்க்கும் பிறர்க்குந் தகுந்த சமாதானங்களைச்சொல்லி இவர்கள் மணத்துக்கு அவரை இசைவித்தும், ஒருவரையொருவர் பிரிய நேரிட்ட காலங்களில் இவர்களை ஆற்றுவித்துத் தேற்றியும், தலைவி தலைவனோடிப் பிணங்கியபோது அவள் கோபத்தைத்தணித்து இருவரையும் பொருத்துவித்தும், இன்னும் பலவாறும் இவர்களுடைய இன்பவாழ்வுக்குப் இன்றியமையாத் துணையாயிருந்த பாங்கி,

> மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு

என்ற பெருநாவலர் பொய்யாமொழிக்கு இலக்கணம்போல அமைந்த இவ்விருவருடைய அப்போதிய இல்வாழ்க்கையை வியந்து,

> அறத்திற் றருமன்; பொருளிற்
> றனபதி, ஆய்ந்தவின்பத்
> திறத்திற் சிலைமதன் ; சிந்தையிற்புந்தி ;*
> திருந்துவண்மைப்
> புறத்திற் புவிஅயல் போற்றுங்
> கலையிற் பொதியமுனி ;
> மறத்திற், சிறந்த வளவய லூரன்,
> மடங்கல்என்றே

189073

தலைமகனையும்,

> கற்புக் கருந்ததி ; நாணுக்கு மானக்
> கவரிநன்மான்;
> பொற்புக்கும், வாய்ந்த பொறைக்கும்பொன்
> பூமகள், கோமகன்றன்
> அற்புத் துணைவி; அறத்துக்
> கெலாமன்னை; ஆடகமால்
> வெற்புக் குயர்ந்த மணக்கென்றும்
> நந்தா விளக்கொளியே

என்று தலைமகளையும், புகழ்ந்து பாராட்டி இருவரும் தம்மகனுடன் நலங்கள்யாவும் நிரம்பப்பெற்று நீடூழி வாழ்கவென்று வாழ்த்தி, மகிழ்வுற்றிருந்தாள்.

* புந்தி=புதன்.

அகப்பொருள் வரலாறு
முற்றிற்று.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 1½ அணா.

வி..பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

அண்ட புராணம்.

[731 வது பக்கத் தொடர்ச்சி]

புகையிலைச் சிறப்புப் படலம்.

ஒலிகட லுலகந் தன்னில் ஒளிர்தரு பொருள்க ளெல்லாம்
கலிகெட நல்கு மந்தக் காசிபன் றன்னைப் பின்னும்
பொலிவுட னிலையிற் ரோன்றும் புகையினைப் பருகிமாந்தர்
நலிவகன் றிடுவ தென்னோ என்றவர் நயந்து கேட்டார்

என்றவர் வினவக் கேட்ட இருந்தவ னிதயத் தெண்ணி
அன்றரன் தாளாற் பட்ட அந்தக னுயிர்ப்பா லாமிந்
நன்றொளி ரிலையின் பேற்றை நானறிந் திட்ட வண்ணம்
இன்றுமக் குணர்த்தக் கேட்டே உய்மினென் றுரைக்க
[லுற்றான் 2

ஒண்டவத் தோங்கு தூய மார்க்கண்ட னுயிரை வௌவத்
த்ண்டொடு பாச மேந்தித் சருக்குடன் வந்த காலன்
அண்டர்நா யகன்றன் றாளா லடர்த்திட வவல மெய்தி
மிண்டிய விறல ழிந்து வீழ்ந்திட்டான் வீய்ந்தா னென்ன3

வீழ்ந்தவன் பேழ்வாய் நின்று மீயெழு புகையின் வீக்கம்
சூழ்ந்தபே ரிருளிற் சென்று சுடரொளி மாய்த்து மீண்டு
ஆழ்ந்தவார் கலிசூழ் வையத் தாரண வனத்தி னோர்சார்
தாழ்ந்ததோர் செடியாய்த் தோன்றி தழையுடன் தயங்கிற்
[றன்றே 4

தயங்கியே யதன்கண் ணூர்ந்த தழையினை மேய்ந்த மாக்கள்
மயங்கியே சற்று நின்று மகிழ்மிக வெய்திப் பின்னர்
வயங்கியே வாலை யாட்டி வலிமிகுந் தங்குமிங்கும்
இயங்கியே யேகக் கண்டார் இமையவர் முனிவர் யாரும் 5

கண்டவ ரிஃதென் னென்று கருத்தினிற் றெளிய மாட்டா
தண்டசன் றன்னை யுற்றுக் கேட்டது மவனுந் தோரான்
ஒண்டவ ரமா ரோ்டும் ஒங்குயர் கயிலை சார்ந்து
விண்டவர் புரங்க ளட்ட விமலன்றான் பணிந்து நின்றான் 6

நின்றவன் றன்னை யந்த நிமலனும் நிமிர்ந்து நோக்கி
இன்றிவ ணீவிர் வந்த கௌவையென் னியம்பு மென்னத்
துன்றிய தழையோ டவனித் துலங்குமச் செடியா தென்று
நன்றுண ரார்வத் தாலே நண்ணினம் நின்தா ளென்றான் 7

வேறு.

பன்னு மாரணன் பகர்ந்ததைப் பரமனுங் கேட்டு
மன்னு மாதவன் மார்க்கண்ட னுயிரினை வாங்க
உன்னி முந்திய காலனை யுதைத்துநான் றன்னைத்
துன்னி யன்றவன் வாய்பொழி குருதியி னுடனே 8

பொங்கி மீதெழு புகைக்குழாம் புவிதனி லிழிந்து
துங்க மறைவன மதனிடைத் துன்னியோர் செடியாய்த்
தங்கி நின்றுள தென்றதன் பிறப்பினைச் சாற்றி
அங்க விலையின தருங்குண மனைத்தையும் பகர்ந்தான் 9

விடையான் பகர்ந்ததை விம்மித முடனவர் கேட்டு
அடையார் புரமெரித் தெங்களை யாண்டரு ளண்ணல்
உடையா வலியுடன் வாழ்வரு ளிதனையே முலகின்
இடையே வாழுயி ரெய்திட வருளுதி யென்றார் 10

நன்றென் றவருட னக்கனு மறைவன நண்ணி
ஒன்று முயர்நலத் தழைமலி செடியரு குற்று
மன்றி னடம்பயில் மலரடி மீதுறத் தீண்டி
மன்ற மற்றதின் மாண்வலி வைகிடச் செய்து 11

விண்ணின் மின்னென விளங்குமிவ் விலையினி லமர்ந்து
நண்ணு மருங்குணம் பெருநல நன்குநீர் பெறவே
சுண்ண மாக்கியும் புனைசுருட் டாக்கியும் புகையை
உண்ணி னுனுறு பிணியவை ஒழிந்துர முறுவீர். 12

என்று மனமுவந் திறையவ னிசைத்தரு ளிலையி
னென்றை யுளமிகு மோகையோ டும்பர்கோன் கொண்டு
துன்று போகத்துத் துறக்கநா டதனையுற் றிருந்தான்
அன்று தொடங்கியந் நறும்புகை யார்ந்திட வெண்ணி. 13

அதனை யன்னவா றருந்தவ முனிவருங் கொண்டு
சிதைவி னற்றவஞ் செய்திடத் தம்புரை சென்றார்
புதையல் கண்டன ராமெனப் பூதல மாக்கள்
இதனை தாங்களுந் துய்த்திட துணிந்தினி திருந்தார். 14

வேறு.

இன்னவா றவர்க ளேக எமனுந்தன் னயர்வு நீங்கித்
தன்னுடை யுயிர்ப்பி னின்றுந் தழைத்திடு மிலையி னாலே
மன்னிய வமர ரோடு மாந்தரு முனிவர் தாமும்
துன்னிய துயர்க டந்து சுகம்பெறத் துணிந்த தோர்ந்தான்

ஆங்கவன் கவலை யெய்தி அரனுறை கயிலை சார்ந்து
தேங்கிய கங்கை வெள்ளச் சடாதரன் திருமுன் னுற்று
பூங்கழல் வணங்கி நின்று புனிதநீ மாந்தர்க் கெல்லாம்
ஒங்கியென் னுயிர்ப்பின் வந்த புகையிலை யுதவ லாலே 16

பிணிமுதற் பாச நீங்கப் பெற்றவர் நீடு வாழின்
தணவரு மெனது செங்கோல் சாய்ந்திடுஞ் சிறிது நாளில்
திணியுயிர்ப் பொறையை யாற்ற தழுங்குவள் பூமி தேவி
பணியலர் சற்று மென்னை மதிக்கலர் பாரோர் பின்னர் 17

தருமனஃ துரைக்கக் கேட்டுத் தழலுறு செங்க ணனும்
பொருவரு முயிர்ப்பின் வந்த புகையிலைப் பலத்தி னாலே
அரும்பிணி தீர்ந்து மாந்தர் ஆயுணீ டுவரென் றேநீ
வருந்திட அதைநான் மாற்றல் வாய்மைக்கு வழுவா மன்றே
அயர்ப்பொடு நோயுநீங்கு மென்றருள் செய்தே னல்லால்
உயிர்ப்பொறை பொன்றுதென்றும் உறைவரென் றுரைத்
[திட் டேனோ
மயற்புகை யிதையுட்கொண்டு வாழ்வுறான் தேய்ந்து மாந்தர்
நயப்பது தினது காவல் நண்ணுவர் விரைவி னென்றான் 19

வேறு.

கடவுளவன் கழறியதைக் கேட்டறிந்தக் காலனுந்தன்
திடமுளாற் பாசதண்டச் செங்கோலைத் திசைசெலுத்தி
விடமனவப் புகையிலையை விழுப்பொருளா வுணுமாக்கள்
கடிதடைவ ரென்னுலக மென்றுமனங் களித்திருந்தான்

காலனவன் வாய்ப்பிறந்து கண்ணுதலோன் கருணையினால்
ஞாலமுறை மாந்தரது பிணியயர்வா நலிவகற்றிச்
சூலகமன் பதிசெலுத்தும் புகையிலையின் தொல்புகழை
எனுமோநா னெடுத்துரைத்த லென்றிறுத்தான் காசிபனும்

வேறு.

இத்தகைப் பெருமை வாய்ந்த இலையிதின் சீரையெல்லாம்
பத்தியிற் பன்னு வோரும் படிப்பவர் கேட்போர் தாமும்
நித்திய நிமலன் வாழு நீடுல குறுவ ரென்றால்
நித்தலு மதனை நுகர்வார் நிலையினை நிகழ்த்த லாமோ. 22

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

இராசசூயச் சருக்கம்.

712 பக்கத் தொடர்ச்சி

சராசந்தன்வதம் முடிவு பெற்றது. அவனால் காவலி லடைபட்டிருந்த அரசரனைவரும் சிறை நீங்கி னார்கள். அவன் மைந்தனுக்கு முடி சூட்டி மூவரு மிந்திரப்பிரஸ்தம் வந் தடைந்தார்கள். ஆங்கு இவர்களை யறத்தின் சுதன் எதிர் கொண்ட ழைத்தான். கருதுதற்கரிய செல்வமனைத்தை யுங் கவர்ந்து வந்தவர்கள் காட்ட, சுருதிப்படியே யாகஞ் செய்வானெண்ணிய தருமன், நான்கு திக்கு களிலுள்ளோரை யெல்லாம் வெல்வதற்கு வேண்டிய, சூழ்ச்சிகளைக் கருதி யாய்ந்து, கிழக்கே வீமனையும் வடக்கே அருச்சுனனையும், மேற்கே நகுலனையும், தெற்கே சகாதேவனையும் ஏவினன். அவருட னெ ழுந்துபோந்த சேனை மண்ணும் விண்ணும் உரகதல மும் நடுங்க வார்த்தடர்ந்தது. தார்வேந்தர் நால்வரை யும் நான்கு புறமும் செல்ல வனுப்பிய

மீனங் கமட மேனநர வரியாய் நராராய் மெய்ஞ்ஞான
வானந் தமுமா கியநாத னன்றே துவரா பதியடைந்
[தான்

[மீனும், ஆமையாயும், வராகமாயும், நரசிங்கமாயும், மானிட வடிவுடைய வாமனராயும், பரசுராமனுயும், தசரதராம னும் பலராம கிருஷ்ணனும் உண்மையினது ஆனந்தவடி வாகிய தலைவ னப்போதே துவாரகையை யடைந்தான்]

கண்ணனும் தன்னூரை யடைந்தான். அடைமொழி களைத் தராமற் பெயர்களை யடுக்குவதில் ஆசிரியர் வல்லவரென்று முன்னரே கூறியுள்ளோம். இனி வரப்போவதாய்ச் சொல்லப்படும் கல்கி யவதார மொழிந்த ஏனைய வொன்பதவதாரங்களும், முத லடியிற் சொல்லப்பட்டிருப்பதை நண்பர் கண் டுணர்வாராக. நராராய் என்னும் ஓர் மொழியிலேயே ஐந்து அவதாரங்களடங்கியிருப்பது வில்லியின் சுருங் கச்சொல்லுமழகை வெளிப்படுத்துகிறது. அன்றியும் அவ்வடியிற் பத்தவதாரங்களுஞ் சொல்லப்பட்ட தென்பதற்கு மிடமுண்டு. அரியென்னு மொழியை யிதுகாறும் பற்பல பொருளில் ஆசிரிய ருபயோகப் படுத்தினரென்பது, இதுவரை நாம் எடுத்துக் காட்டி வந்த வுதாரண வாயிலானே விளங்கும். இவ்விடமும் நரவரி யென்பதற்கு நரசிங்கமெனவும், நரவடிவும் குதிரைவடிவும் பொருந்திய கல்கியமெனவும் பொ ருட்கொண்டால் தசாவதாரம் முற்றுப்பெறுகின்றது. ஆயினும், அப்பொருள் மெய்ப்பொருளன்று. கல்கிய மின்னும் நிகழாததா லப்பொருள் சிறந்த பொருளா காது. மற்றுப் புத்தாவதாரத்தை யோரவதாரமாய்க் கொள்ளின் அது நரரா யென்பதிலேயே யடங்கி நிற் கும். இவ்வாறு, காரணம்பற்றித் தசாவதார மெடுப் பினும், தலைவனுந் தன்மையிற் றிரிபில்லாதவனென் பது தோன்ற 'மெய்ஞ்ஞான வானந்தமுமாகிய' சச்சி தானந்தனென்று கூறப்பட்டது. மாதிரங்களை வெல் லப்புறப்பட்டவர்களுள் முதலாமவனான வீமனுடைய புறப்பாட்டைக் கவி, யவனது ஆடம்பரத்தை விளக் குவதற் கேற்பட்ட சந்தமுடுக்குடைய செய்யுட்க ளொருநான்கா லோதுகிறார். அவைகளிலொன்று வரு மாறு:—

வான்ம ருச்சுதனு மீரி ரண்டுகடல்
வயவ ரூதினியின் வர்க்கமு
நான்ம ருப்பொருகை மும்ம தத்துவய
நாக மேவிவளர் திசையின்வாழ்
கோன்ம திக்கநெடு வங்க முந்திகழ்க
லிங்க முந்தெறுகு லிங்கமுந்
தான்ம லைத்துமுனை முரண்மி குத்துவரு
தரிய லாரைமுனை தள்ளியே

[பெருமைபெறு வாயுவின் குமாரனும், நான்கு கடல்கள் போன்ற வலிய சேனைவகையும், நான்கு தந்தங்களையும், ஒருகையையும், மும்மதங்களையுமுடைய வலிய ஐராவதம் பொருந்திய கீழ்த்திசையில் வாழ்கின்ற அரசனான இந்திரன் உயர்வா யெண்ணும்படி வங்க, கலிங்க குலிங்கமென்னு நாட்டரசர்களைப் போரிட்டு; போர் முனையில் வலியை மிகுதியாய்க் காட்டி, வருகின்ற பகைவரை யப் போர்முனை யில் தள்ளிவீழ்த்தி]

இரண்டு, நான்கு, ஆறுஞ்சீர்களைக் காய்ச்சீர்களாய் நீட்டி மற்றவைகளை யிருசீர்களாய்க் குறைத்தலினால் போர்க்குரிய செயல்களைப் பொருந்தவுரைக்கும் பெற்றி யுண்டாயிற்று.

மேற்றிசை சென்ற நகுலன் முன்னின்று போர் புரிந்த வரசர்கள் யாவரும்,

இடாத வன்றனமெ னக்க ரந்தனர்க ளேனை
மன்னவர்கள் யாருமே

வழங்காதவன்றன மெவ்வாறு பெருகாது தேய்ந் தொழியுமோ வதுபோலோடி யொளித்தார்கள்.

தென்றிசை புக்க சகாதேவன் எதிர்த்த வரசர்களை யெல்லாம் சிதறவடித்துத் திறைகொண்டு நீலனென் போன் வாழும் மாகிஷ்மதி பதிபுகுந்தான்.

அந்த மாநகரி காவ லானசுட ரங்கி
சீறியெதிர் பொங்கிமேல்
வந்த வீரன்மிகு சேனை யாவையு மயங்க
வெம்புகையி யங்கவே
கந்து சீறுகளி யானை மன்னனது கண்டு
வெங்கனல விப்பதோ
ரிந்து மாமுக சரங்க ளேழுநெடு நாவி
னனழிய வேவினன்

[அந்தப்பெரிய நகருக்குக் காவலான ஒளிவீசும்அக்கினிக் கடவுள் சினந்து பொங்கி மேல்விழுந்து வந்த வீரனுடைய சேனைகளெல்லாம் மயங்கும்படி வெம்மையான புகையோடு பரவவே, கட்டுத்தறியைச் சீறியழிக்கும் மதங்கொண்ட யானைப் படையையுடைய சகாதேவன் அதைக்கண்டு அக் கனலை யவிக்க ஒப்பற்ற அர்த்த சந்திர பாணங்களை ஏழு நாவுடைய அக்கினி அழியும்படி யேவினன்.]

வேற்றரசன் படையெடுத்து வரவே நீலனது பெண்ணை மணந்திருந்த அக்கினி; சகாதேவன் தனக் குணவளித்த வருச்சுனனது தம்பி யென்பதை மறந்தும், அவன்முன் நாகருறவையுங் கருதானுய்த் தக்ககன் முதலானோரைக் கொன்றுனதலாற் றானுமவ் வாறே அவன் றம்பிக்குற்ற துணையாய் நின்று உதவ வேண்டுமென்பதை யுன்னுதும், புகைகக்கி யவன் சேனைகளை யுடற்றினன். சகாதேவனுக்குச் சினம்

மிருந்தது. தானறிந்த கல்வியாற்பெற்ற குளிர்ச்சி பொருந்திய அம்புக ளவனுக் கக்கண மெய்தற்கமைந்தன. அவைகளு மவனா லெய்யப்பட்டன. அஞ்சிய அக்கினி யவன்முன் றோன்றினான்.

இது வடமொழியில் வேறு வகையாகக் கூறப்பட்டுள்ளது. தணலைத் தாங்காத சகாதேவன் பட்டினி கிடந்து புல்லிற்சாய்ந்து தவங்கிடப்ப, அடைக்கலம் புகுந்தாரைக் காக்கவேண்டிய அக்கினியும் அவன் வழிபாட்டி லீடுபட்டு அவன்முன் றோன்றினானென்றும், பின் சகாதேவன் தான் வந்த காரியத்தை யெடுத்தோதலும், அக்கினி மறைந்து நீலனுக்குரைத்து அவனை நண்பனாக்கினானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பதினெட்டாம் பாடலிலொரு முறையும், இருபத்தொன்பதாம் பாடலின் ஒருமுறையும், நாற்பத்திரண்டாம் பாடலிற் பின்னொரு முறையும், சந்தம் மாற்றப்பட்டிருக்கிறது. அவ்வேறுபாடு அவ்வவ் வமயத்திலேற்படும் பொருணயத்திற்கேற்ற வோசையோடியைந்துள்ளது. இச்செய்யுளிலும், முதலடியில் அங்கி, பொங்கி யென்றும், இரண்டாமடியில் மயங்க இயங்க வென்றும், கடையடியில் நாவினான் ஏவினான் என்றும் எதுகைபோன்ற எழுத்துப் பொருத்தம் ஏற்பட்டிருப்பது ஓரழகைத் தருகின்றது. அது பிராசமென்னும் சொல்லணியாம்.

முன் தீர்த்தயாத்திரைச் சருக்கத்திற் சொல்லப்பட்ட நாடுகளே சகாதேவன் சென்ற நாடுகளும். இறுதியில் கடோற்கசனை யழைத்து இலங்கையைவென்று வரச் சொன்னான். அவனும் அவ்வாறே செய்தான். முத்தும் மணியும் பொன்னுந் துகிரும் வகைபடப் பொருந்திய குவியலனைத்தும், பல்வேறு மாதிரங்களினின்றும் இந்திரப்பிரத்தத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன. ஓலைபோக்கியும், ஊடகளை விடுத்தும், மன்னர்களையும் மறையோரையும், வேறுபல மானவரையுந் தருமன் தலைக்கூட்டினான். துழாயண்ணலுந் தோன்றினார். அனைவரும் தேரின்மேலும், களிற்றின்மேலும், மற்றுமுள்ள பல வாகனங்களின் மேலுமிவர்ந் தூர்வலம் வந்தார்கள். கண்ணனைக்காண நகரமாத ரீண்டினார்.

ஈரடி களினுஞ் செம்பஞ் செழுதுவா ரெழுது முன்ன
ரோரடி யெழுதி மின்போ லொல்கிவந் திறைஞ்சு வாரு
மாரமு தனைய கண்ணி னஞ்சன மெழுது கின்ற
சீரிய கோலுங் கையுந் திருத்தகத் தோன்று வாரும்.

[இரண்டு பாதங்களிலும் செம்பஞ்சுக் குழம்பையெழுதத் தொடங்கிய மாதர் எழுதி முடிப்பதற்குமுன், ஒருபாதத்திற்கு மட்டுமெழுதி மின்னலைப்போல் நுடங்கி வாயிலில் வந்து வணங்குவாரும், அருமையான அமிர்தம் போன்ற கண்களில் மைதீட்டுங் கோலாகிய துகிலிகைக் கோலும் கையுமா யழகுற வாயிலில்வந்து தோன்றுவாரும்]

படைப்புத்தொட்டு மாதரார்க்குக் கண்டறியு மவாவுண்டு. மிகவும் முக்கியமான வேலைகளி லாழ்ந்திருந்த போதிலும், கணவனுக் கமுது படைத்துக்கொண்டிருப்பினு மேதாவதொரு விநோதம் வாயிலில் நடைபெறுமேல், தமது தொழில் முற்றப்பெறுமுன் பாதியில் விடுத்து வீதிநோக்கி யவ ரோடுவதுண்டு. கண்ணனைக் காணுமவா மேலிடத் தங்கள் வாயிலை விட்டுக் கண்ண னகல்வதன்முன்ன ரவனைநோக்க வவ ரோடிச் சென்றார்கள். பஞ்சுக்குழம் பெழுதுவதை முடிக்கவெண்ணில் பவனி முடிந்துவிடும். தாங்கள் செய்யும் வேலைகளெல்லாம் நெடுநேரஞ் செல்லுமென்றறிந்தேபோலு மங்ஙனமவரோடியது. 'இருந்த விடத்தினின்று ஓரேதாவுட னோடிவந்தவர் மின்போல் முதலிடத்திருந்து மறைந்தார். ஓடிய வேகத்தாலும், அதனாலுண்டான சிரமத்தாலுங்கொடிபோலொசிந்து மற்றொரிடமான வாயிலில் நின்றார். கருவிழி கண்ணைப் புடைசூழ்ந்த வெண்மை நிறத்தை விளக்கிக்காட்டலாலும், பெரிய கண்கள் காண்போர்க்கு மகிழ்ச்சியைத் தரலாலும் அவை ஆரமிர்தனைய கண்களாயின, காதலர்க்குக் கடைக்கண்ணோக்கால் மெய்ப்புளகிதமுண்டாக்கி மகிழ்வித்தலாலும் அவை அமிர்தமாயின. கோலுங் கையுமாய்த் தோன்றியதென்னது நாடக வமைப்புக் கொண்டுள்ளது.

நன்னெறியின் ஏற்றம்

மனிதர், தம் பாவகாரியங்களை ஒழிக்கவும், உலக வாழ்க்கையின் உன்னத பதவியைப்பெற்று உயர்நலமடையவும், உயிரின் உண்மை நிலையை அறியவும் உணர்ச்சிக்கு விரோதிகளை விலக்கவும், மானிடப் பிறவியின் பயனாக இறைவனடி அடையவும், கடவுள் அவதாரம் செய்கின்றனர் என்னலாம்.

தம்மிடத்தில் தவறுண்டென்பதைக் காண்பதில்லா மாந்தர்க்குக் கடவுளும் நன்மைசெய்ய வலியற்றவர். இம்மானிடர் தாமடைந்துள்ள பதவியால் கர்வம் பூண்டு, தமது உயர்ச்சிக்கு அப்பதவியே சாக்ஷியாக நினைக்கின்றனர். இவர்கள் இவ்வாறு எண்ணுவது குற்றமாகும். இவர்கள் அடைந்திருக்கும் நன்மை அதனினும் பெரிய நன்மையைப் பெறுவதற்கு இடையூறாய் நிற்கின்றது. கடவுள் அவதாரமே அஸம்பவமென்றும், அதில் நம்பிக்கைவைப்பது மானிட அறிவுக்குக் குறைவென்றும், இறைவன் பெருமைக்குச் சிறுமையென்றும், இத்தகையோர் தம் அறியாமையால் நினைக்க இடமுண்டு.

மற்றவரைவிடத் தாம் அறிவுவாய்ந்தவரென்று எண்ணுதல் மானிடரியல்பு. தம்மிடத்துள்ள நற்குணங்களை வியக்கும்மனிதர், பிறரைக் கீழோரென்று அவமதித்துத் தாமே நல்வழியில் நின்றோமென்று தம்மைத்தாமே மகிழ்ந்து வருகின்றனர். இத்தற்புகழ்ச்சியினால் பல கேடுகள் விளைகின்றன. இனையோர், தம் உயர்ச்சியை ஒத்துக்கொள்ளாதவரைத் தமக்கு விரோதிகளென்றும் நன்னெறியை நாடாதவரென்றும் நினைக்கின்றனர். தாம் அடைந்துள்ள பதவியிலேயே நோக்கமுடையோர்களுக்கு அப்பதவியினினும் உயர்ந்தது ஒன்று உண்டு என்று காணக் கண்ணில்லை. இவர்கள், இறைவன் என்று ஒருவனை நியமித்து அவனைத் தங்கள் இஷ்டங்களை நிறைவேற்ற ஒரு ஸாதனமாகக் கருதுகின்றனர். மேலும், இவர்

கள், தம் குணம் குலம் ஒழுக்கம் முதலிய விசேஷங்களால் கடவுளின் கடாக்ஷத்துக்குத் தாமே அருகர் என்றும், கடவுள் தமக்கு அருள்செய்யக் கடமைப்பட்டவரென்றும் நினைக்கின்றனர். இவ்வாறு இவர்கள் இறைவனைத் தமக்கு அடிமையாகக்கருதி, தம்மை மகிழ்வதும் பிறரை இகழ்வதுமே கடவுளுக்குக் காரியமாக நியமிக்கின்றனர். இத்தகைய குருட்டுத்தனத்தால் உயர்குலத்தில் பிறந்தவர்களும் தாழ்மையடைகின்றனர். இவர்கள் பாவிகளென்பதின்றிக் கடவுளால் உகக்கத்தக்கவரென்று; "தம்மைத் தாமே சம்மதிக்கும்" எண்ண முள்ளவர்களான அறிவீனரே.

பெரும்பாலும், ஆசாரக்கொள்கை யுடையவர்கள் இவ்வெண்ணம்கொள்ளும் மனோபாவமுடையவர்களாயிருப்பதைக் காண்கின்றோம். ஆயினும், நாஸ்திகர்களும் இவ்வாறு நடந்துகொள்ளக் கூடும். இவர்கள் கடவுளில் நம்பிக்கை அவசியமில்லை யென்றும், தாங்கள் அப்படிப்பட்ட நம்பிக்கை யிருப்பதாகப் பாசாங்கு செய்வதில்லையென்றும் சொல்லித் திரிகின்றனர். நாஸ்திகருக்கும், தாம் நிற்கும் நிலையினும் உயர்ந்த நிலையில்லையென்றெண்ணும் ஆஸ்திகருக்கும், அதிக வேற்றுமையில்லை. இவ்விருதிறத்தினரும் இறைவனடி அணுகுவதருமை.

மனிதரின் ஒழுக்கத்தின் உயர்ச்சிக்கு அவர் தற்கால நிலைமை குறியன்று; அவர் நடத்தை நாடோறும் எவ்வாறு மாறுபட்டு விளங்குகின்றது என்பதே தக்க சான்றாகும். இவ்வாறு நோக்குங்கால், பொல்லானொருவன் தன் தீக்குணத்தைக் கடிந்து, விம்மி, வெதும்பி, நன்மையை நாடமுயலின் அவன், தன்னைவிட உயர்ந்த அறிவுடையவர்களில்லை என்றெண்ணுகிறவனைக் காட்டிலும் மிக உயர்ந்தவன். முன்னவனுக்கு உய்யும் வகையுண்டு; பின்னவனுக்கு என்றும் நற்கதியில்லை. இவ்வாறன்றோ, பூர்ண கருணையும் பேரருளும் பூண்டு நிற்கும் கடவுள் நமது கீழ்மையைக் கருதாது, நம்முள்ளும் புறமும் என்றும் எவ்விடத்தும் நம்கூடவே நின்று நம்மைப் படிப்படியே மேன்மையடையச் செய்கின்றார்!

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

17. உண்டாட்டுப் படலம்.

[734 பக்கத் தொடர்ச்சி]

மரபினால் மாதர் மதுவும் மாந்துவார்.

கலந்தவர் களிக்கவும் தணந்தவ ருளையவும் புலந்தவர்
நயந்துட னணுகவும் புரிதரு முழுமதி உதித்
திடும் பொழுதினில்,
பூக்கம ழோதியர் போது போக்கிய
சேக்கையின் பச்செருச் செருக்குஞ் சிந்தையார்
ஆக்கிய வமிர்தென வம்பொன் வள்ளத்து
வாக்கிய பசுநறா மாந்தன் மேயினார்.

[மலர்மணம் வீசுகின்ற கூந்தலையுடைய மாதர், மலர்கள் தூவிய படுக்கையின் இன்பந்தரும் கலவிப்போர் புரிந்து களிக்கவேண்டும் எனும் எண்ணமுடையவ ராகி, பாற்கடல் கடைந்தெடுத்த அமிர்தம்போல், அழகிய பொன் கிண்ணங்களில் வடித்த புது மதுவை உண்ணத் தொடங்கினார்]

இது மகளிரே தம்முட் செய்யுமொரு தனித்த செய்தியாய்த் தோன்றுகின்றது. விரைவிரி பொழில்கள் துய்த்தும், மீனெலாம் நாணம் நாறக் கரையெறி வாவிதோய்ந்துங் கணவரோ டாடுமந்தத் தெரிவையர் தேறல் மாந்துஞ் சூழ்ச்சிய ராயபோது பிரிவரு காதலாரை விலகினர் பெயர்ந்துவிட்டார். கம்பர் விளக்குமிக் காட்சியி லாடவரிங் கிப்பொழு திருக்கக் காண்கிலேம். மதுவருந்தி மாதர் ஆடிய ஆட்டமெல்லாம் ஓய்ந்தபின்னர்த் தூதுகள் போக்கித் தம்கொழுநரை வரவழைக்கும் வரையில் மைந்தரங்கு எய்திலர். நறவினை நயந்துமாந்தி நாணத்தை நீங்கிநிற்கும் முறையிலா விந்தச்செய்கை முற்றிலும் மாதர்தங்கள் பொறுப்பிலே நிகழ்வதாகும்; புருடர்கள் அருந்தவில்லை, இறுதியி லேவ வந்தார், இன்பங்கள் நல்கப் பெற்றார்.

இதனால், கோசலக் குலமன்னர் மரபுளார்க்கும், முசுகுந்தனோடு முருகவேள் திருமணங்காணியசென்ற பரிவாரத்தினர்க்கும் உள்ள தன்மையில் நுண்ணியதோர் வேற்றுமை நினைக்க நேர்கின்றது. பொழிலும் புனலு மாடியபின்னர்,

தூயதன் றாகிய புனலெலா நல்கியே சூழ்ந்ததெங்கின்
காயின்வந் திடுபயன் கொள்ளுவார் போற்சில காளை
[மார்கள்
ஆயதன் டேறலையரிவைமார் நுகருவா னருளியன்னார்
வாயின்வந் தூறுமெல் லமிர்தினைக் கொள்வதற்
[குள்ளம்வைத்தார்

[தூயது அல்லாத நீர்முதலியவைகளைப்பாய்ச்சித் தென்னைமரத்தின் காயினால் வரும் பயன்களை அடைகின்றவர்களைப் போல், சில ஆடவர்கள், குளிர்ந்த மதுவை மாதர்கள் குடிக்கும்படி கொடுத்து அவர் வாயில் வந்து ஊறும் மெல்லிய அமிர்தத்தை அநுபவிப்பதற்கு எண்ணங் கொண்டார்]

என்று கச்சியப்பசிவாசாரியார் கந்தபுராணத்தில் கூறுவார். இதன்படி, புருடர் தம் மனைவியரைப் பயன் கருதி வளர்க்கும் மரத்திற்கே நிகராகப் பாவித்தொழுகுபவ ராகின்றனர். தூயதல்லாத நீரும் எருவும் நல்கித் தெங்கின் காய்க்கு அண்ணாந்து நோக்கும் நாட்டமுடைய ஒருவனேபோல் அக்காளையர் கள்ளினைத் தாமே கொணர்ந்து பேதை மடவார்க்கு ஊட்டி அவர் வாய்வரு மமுதிற்கு அங்காந்திருப்பது அவ்விருதிறத்தோர்க்கும் பெருமை யாகாது.

இவ்விதம் மதுவைக்கொணர்ந்து மாதர்க்கூட்டும் பழக்கம் கந்தபுராணத்தில் மாத்திரமேயன்றிச் சீவக சிந்தாமணியிலும் இருக்கக்காண்கின்றோம். முத்தியிலருத்தியோடு முனைந்த ஜீவகன் கடைமுறைத் தன் விளையாட்டெலாம் விழைந்தயர்வானைப்,

எண்ணற் கரிய குங்குமச்சேற்
றெழுந்து நான நீர்வளர்ந்து
வண்ணக் குவளை மலரளைஇ
மணிக்கோல் வள்ளத் தவனேந்த
உண்ணற் கினிய மதுமகிழ்ந்தார்
ஒலியன் மாலை புறந்தாழக்
கண்ணக் கழுநீர் மெல்விரலாற்
கிழித்து மோந்தார் கனிவாயார்

என்று திருத்தக்கதேவர் உரைத்ததும் கம்பருக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆயினும், ஆடவர் இக்கருமத்தில் கலப்பது முறையன்றென்று கம்பர் அவர்களை அகற்றி விட்டனர். 'காதல் மனையாளும் காதலனும் தீதின்றிப் பட்டதே இன்பம்' எனும் முதுமொழிக்கிணங்கக் கணவன் தன் இல்லாளைக் களியாட்டங்கண்டு காமம் நுகரக்கருதாத செம்மை கம்பரால் இங்குத் தோன்றுகின்றது. காமுகர் தம் காமக்கிழத்தியரைக் கையாளும் விதம்அது. கம்பரின் நுண்ணுணர்வு இத்தன்மையைத் தேர்ந்துகொண்டது. எத்தகைப்புருடர் தம்முடைய இன்பமே தலையாகக் கொண்டு மகளிர்க்கு மது அருத்துவாரென்பதை இக்கவிவரர் உயுத்தகாண்டத்தில் காட்டுவார். பிரம்மாத்

திரத்தினால் தன்பகையொடுங்கி மாய்ந்ததென மதித்த
இராவணன் எழுந்து பொங்கித்
தன்னையுங் கடந்துநீண்ட வுவகையன் சமைத்தகீதங்
கின்னரர் முதல்வர்பாட முகத்திடைக் கிடந்தகெண்டைக்
கன்னிநன் மயிலனாரை நெடுங்களி யாட்டங்கண்டான்

[இராவணன், தன்னையும் கடந்த சந்தோஷத்தை உடையவனாய் எழுந்து கின்னரர் முதலானவர் கீதங்கள்பாட, கெண்டைபோன்ற கண்களுடைய முகத்தினரும்இளமயில் போன்ற சாயலுடையவருமான மாதரைக் கள்மயக்கங் கொண்டு ஆடும்படி செய்தான்]

என்னு மாற்றால், இராவணனனைய அரக்கர்க்கே அந் நோக்கமும் தொழிலும் உரியனவென்பது ஒருவாறு தோன்றுகின்றது. இராவணனும் தன் மனைவியை இவ்வண்ணம் களியாட்டங் காணப்புரிந்திலன்.

இனி, இவ்வயோத்திமைந்தர் மாதர்க்குக் கள் அருந்தா திருப்பதன்றித் தாமுமே எந்நாளும் மது வருந்தும் பழக்க முடையவரல்லர் என்றே எண்ண இடமுளது. முன் நகரப்படலத்தில் அயோத்தி மக்கள் பொழுதுபோக்கும் வகைகளை உரைக்கும்போது,

நந்தன வனத்தலர் கொய்து நவ்விபோல்
வந்திளை யவரொடு வாவி யாடிவாய்ச்
செந்துவ ரழிதரத் தேறன் மாந்திச்சூ
துந்தலிற் பொழுதுபோஞ் சிலர்க்கவ் வொண்ணகர்

என்று காட்டியவாற்றால், இவ்விடத்தில் நிகழ்வதே போல், நந்தவனமும் வாவியும் ஆடியபின்னர்க் கள்ளருந்துதற் குரியவர் மாதரே என்பார்போல் ஆடவர் அவர்களைவிட்டுப் பிரிந்து அகல்கின்றவராதல் தெரிகின்றது. கள்ளன்றிக் கவறாடற்கும் மாதர்களே விழைகின்றவ ராகின்றனர். இச்செய்தி அயோத்தியில் மாத்திரமல்லாது மிதிலையிலும் இவ்வாறே நிகழக் காண்கின்றோம். கோசிகனும் தயரதன்தன் புதல்வரும் சனகன்மா நகரியில் உலவிச் சென்றபோது, அங்கும்,

பளிக்குவள் ளத்து வார்த்த
பசுநறுந் தேறல் மாந்தி
வெளிப்படு நகைய வாகி
வெறியன மிழற்று கின்ற
ஒளிப்பினு மொளிக்க வொட்டா
வூடலை உணர்த்து மாபோல்
களிப்பினை யுணர்த்துஞ் செவ்விக்
கமலங்கள் பலவுங் கண்டார்

என்பதால், மதுப்பருகக் கண்டவர் மாதரேயாகின்றனர். மற்று,

கடகமுங் குழையும் பூணு
மாரமுங் கலிங்க நுண்ணூல்
வடகமு மகர யாழும்
வட்டினி கொடுத்து வாசத்
தொடையலங் கோதை சோரப்
பளிக்குநாய் செவப்பத் தொட்டுப்
படைநெடுங் கண்ணார் வட்டாட்
டாடிடம் பலவுங் கண்டார்

என்பதால், ஊக்கமொடு கவறாடுந் தொழிலுடையாரும் காரிகையார்களே ஆகக் கண்டனர்.

கள்ளிற்கும் காரிகையார்க்கும் உள்ள தொடர்பினை உரைக்குங்கால் இங்குத் தன்னினமுடிப்பான் கவறும் கூறப்பட்டது. மாதர் மது வருந்தினர் என்பது தோன்றநிற்றலாலே ஆடவர் அது அருந்துவாரலர் என்றெண்ணப் பொருந்துமோவெனும் சங்கைபற,

புள்ளுறை கமல வாவிப்
பொருகயல் வெருவி யோட
வள்ளுறை கழித்த வாள்போல்
வரியுற வயங்கு கண்ணாள்
கள்ளுறை மலர்மென் கூந்தல்
களியிள மஞ்ஞை யன்னாள்
உள்ளுறை யன்ப னுண்ணு
னென்கற வுண்ணா லெண்ணாள்.

[பறவைகள் தங்குகின்ற தாமரைக்குளத்தி லுள்ளனவாய் ஒன்றோடொன்று மோதுகின்ற கயல்மீன்கள் ஒப்பாகாமல் பயந்து ஓடும்படி, தோல்உறையினின்று கழற்றிய வாள்போல் வயங்குகின்ற கண்களை உடையவளும்; தேன் தங்கிய மலர்சூடிய கூந்தலையுடைய களித்த இளமயிலைப்போன்ற சாயலை உடையவளுமாகிய ஒருத்தி, தன் உள்ளத்தில் அகலாது தங்கியுள்ள அன்பன் மதுப்பழக்கமில்லாதவன், தான் கள்ளுண்டாலோ அது உள்ளத்துள்ள அக்கணவனைச் சேரும், என்று அவன்பால் கருத்துடையவளாகித் தான் மதுவைப் பருக நினைத்திலன்]

என இப்படலத்தில் பின்னொருசெய்யுள் பகர்கின்றது. ஒருத்தியி னகத்திருந்த வொரு அன்பன் தன்மையையே இது குறிக்கின்றதாயினுந் தாலீபுலாக நியாயத்தால் எவ்வெவர் அகத்துறை அன்பரும் நறவுண்ணா நோன்பினரென் றெண்ணற்கிடமுளது. ஆதலின், ஆடவர் தாம், கிட்கிந்தைக் குரக்கல்லால் கள் அருந்துவாரும், இலங்கை அரக்கரல்லால் அருத்துவாரும், இலராக, மதுப்பருகிக்களிக்கும் இது குலமகளிர்க் கொழுங்காமோ வென்றதனுண்மை உணர்தற் கருமையா யிருக்கின்றது. செம்மை நினையாமை பூண்டார் நெறியாய கள்ளுண்டலும் கவறாடலும் பெண்டிரிற்கிங்கு உரியதாக்கியதால் கம்பரும் வள்ளுவரொடு சேர்ந்து 'மகளிர் மனம் வேறுபடுந் தன்மையைக் கண்டவராயினர் என்று கருதுவது முறையாமோ! தெரிந்திருந்தும் அதனை யாடவர் தகையாதிருந்ததென்னே! மற்று, எது நினைப்பினும் அது செய்யும் உரிமை அந்நாட்பெண்களுக் கிருந்ததென்று மன்றோடவோ இவ்வகை இயம்பினர் கம்பர்!

ஆடவர் தாம் குடிப்பதும் கொடுப்பதும் இல்லாது அகன்றிடப் பின் மடவார் எடுத்தருந்திய பானம் எத்தகைத்து என்று ஆயுங்கால், அது "பசுநறு மாந்தன் மேயினர்" என்றும், "மானுடை நோக்கினர் வாயின் மாந்தினர், தேனுடை மலரிடைத் தேன் பெய்தென்னவே" என்றும், "வாய்வழி புக்கதேன் அமிர்தமாய்ப் பொலிந்த போன்றவே" என்றும், "தாமமுண் குழலியர் உண்ட தூநறை" என்றும், "கள்ளினுள் வெளிப்படுகின்ற காட்சி" என்றும், "நச்சுவேற் கருங்கட் செவ்வாய் நளிர்முகம் மதுவுட்தோன்ற" என்றும், "நறவென அதனை வாயின்வைத்தனள்" என்றும், நறு தேன் நறை கள் மது நறவு எனுஞ் சொற்களால் குறிக்கப்பெற் றிருக்கின்றது. இச்சொற்கள், கருத்தழித்து அவசமுறுவிக்கும் மயக்கப்பொருளாம் கள்ளிற்கும் பூவினின்று வரும் தேனிற்கும் பொதுவாய் வழங்குவன. ஆதலின் ஐம்பெரும் பாவங்களுளொன்றாய கள்ளல்லாது இம்மாதர் இங்குக் குடித்தது குற்றமற்ற பூந்தேனேயாயிற் றென்னினும் பொருந்தும். மற்றுத் தகவிலா மதுவன்றி மலர்வருந் தேனேயாயின், மதிமயங்கிச் செயல்நெகிழ்ந்து இவர் கட்குடியாளரேபோல் இழிவரோ என்னின், அதுவும் கடக்கலாகா ஐயம் ஒன்று ஆகவேண்டுவதில்லை. முற்றிலும் இதுவோர் கவிமரபுக் காரியம் ஆதலும் கூடும். காமநோய் கொண்டாரை, தண்மதி தன் வெயிலால் சுடுவதுபோலவும், வாடையும் தென்றலும் வாட்டுவதுபோலவும், அன்றில் தன் குரலால் அழிப்பது போலவும், உருவிலா மன்மதன் ஒளிந்து நின்று மலர்க்கணையெய் தடர்ப்பதுபோலவும், உருவெளித்தோற்றம் வந்து உறஉறத் தழுவுவதுபோலவும், பருகாத கள் மாதரை மயக்குவதும் கவியின் கருத்திலேயே முதிர்ந்ததோர் மரபாதலும் புதுமை என்னற்கில்லை. பருகினது பூந்தேனேனும் அது அப்பரிசு புரியுமெனச் சாதித்தலும் மரபிலக்கணத்திற் கேற்றதே. இம்மரபினை ஆதாரமாகவைத்து அருமைமிகு அழகுடைய கற்பனைகள் செய்யக் கவிகள் களமமைத்துக்கொள்கின்றனர். இப்பரிசு அமைதிகூறி மாதர் தகவிலா மதுவை யுட்கொண்டன ரென்றுரைக்கும் இடுக்கண் தீரலாம் எனினும், கள்ளொடு இணைக்கரமாய் அவர் பயிலும் கவறாட்டம் கவிமரபில் அடங்குமென ஆறுவது அருமையேயாம்.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினாற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்,சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும் விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சியிருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

„ சாதாரண கட்டடம் „ 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம் ...	... ரூ	5	0
அயோத்தியாகாண்டம்	...	5	0
ஆரணியகாண்டம் ...	...	4	0
கிட்கிந்தாகாண்டம்	...	4	8
சுந்தரகாண்டம் ...	...	5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைவாக்கம், சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co.,

Nungambakam, Madras.

வர்த்தமானம்

உண்ணுவிரதத்தால் மரணம்:—விஜயஸ்வாமிஎன்ற பௌத்த சன்னியாசி ஒருவர், பர்மாச் சிறைஅதிகாரிகள்சந்நியாசிஉடையை அணியஅனுமதிதராததற்காக உண்ணுவிரதமிருந்து கடைசியில் இறந்துபோனார்.

* * *

அபின் கஞ்சாத் திருட்டு:—சென்றவாரம் சென்னைப் போலீசார், அபின்கஞ்சா திருட்டுத்தனமாய் வியாபாரம் ஆவது அறிந்து பலவிடங்களில் சோதனைபோட்டு 5 பேரைக் கைதுசெய்தனர் என்று தெரிகின்றது.

* * *

பம்பாய் பிஷப் நியமனம்:—பம்பாப் பிஷப்பாயிருந்த ரெவரண்டு ஸி. ஜெ. பால்மருக்குப் பதிலாக ரெவரண்டு R. D. ஆக்லாந்து என்பவர் மன்னர் பிரானால் நியமிக்கட்டட்டுள்ளார் என்று பம்பாய்ச்செய்தி கூறுகின்றது.

* * *

விவாகவயது மசோதா.—கும்பகோணத்தில் வைதிகர் கூட்டம்ஒன்று சென்றவாரம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இம்மசோதா சட்டமாகுமாயின், இந்துக்களானோர் சத்தியாக்கிரஹம் செய்து இச்சட்டத்தை எதிர்க்கவேண்டுமென்று தீர்மானம்செய்யப்பட்டது.

* * *

ஸ்ரீ சாஸ்த்திரியார் கலாசாலை:— தென்னுப்பிரிக்காவில் ஸ்ரீ சீனுவாஸ சாஸ்த்திரியார் பேரால் ஏற்படுத்தப்பட்ட கலாசாலை, அக்டோபர் மாதம் 4ந்தேதியன்று தென்னுப்பிரிக்கா கவர்னர்ஜெனரலால்திறந்து வைக்கப்படும் என்று தென்னுப்பிரிக்காச் செய்தி கூறுகின்றது.

* * *

கோயிலில் கொள்ளை:—திருநல்வேலியில் சங்குப்பிள்ளை என்பவன் ஒரு பிள்ளையார் கோயிலில் புகுந்து பிள்ளையார் மேலிருந்த தங்கப்பூணூலையும் பல நகைகளையும் களவாடியதாகக் கைது செய்யப்பட்டு மாஜிஸ்டிரேட்டால் 6 வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பெற்றான் என்று தெரிகின்றது.

* * *

லாகூர் காங்கிரஸ்:—காங்கிரஸ் உபசரணைக் கமிட்டித் தேர்தல் முடிந்தது. காங்கிரஸ் விஷயமான மான வேலைகள் தீவிரமாய் நடக்கின்றன. காங்கிரஸிற்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலையும் நடந்து வருகின்றது. ஸ்ரீமான் ஜவஹரிலால் தலைவராய் நியமனம் பெறுவார் என்று தெரிகின்றது.

* * *

மதுவிலக்குக் கமிட்டி.—சென்னை மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியின் கூட்டம் சென்றவாரம் ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்றது. ஸ்ரீமான் எ. ராமஸ்வாமி முதலியார் கமிட்டியின் தலைவராகவும், திவான் பகதூர் டி. வரதராஜலு நாயிடு உபத்தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* * *

பிரஸவ காலத்தில் செய்யவேண்டிய முதலுதவிகளை விளக்கி ஹானரபில் டாக்டர் யு. ராமராவ் அவர்கள் எழுதிய சிறுநூலொன்று தமிழில் அச்சிடப்பட்டு எம்பார்வைக்கு வந்திருக்கின்றது. கர்ப்பிணிகள் தம் உடம்பைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய விஷயங்களும், பிரஸவ காலத்தில் வைத்தியரை வரவழைக்கு முன் செய்யவேண்டியவைகளும் போன்ற சில முக்கியமான செய்திகள் அதனில் அடங்கியிருக்கின்றன. வேண்டுவோர், ஸ்ரீகிருஷ்ணன் பிரதர்ஸ், 323 கெ. தம்புசெட்டித்தெரு சென்னை, என்னும் விலாசத்திற்கு 7 அணுத் தபால்தலை யனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தார்வாரில் பிளேக்:—தார்வாரில் பிளேக் இருந்து வருகிறது. சென்றவாரம் 10 பேர்களுக்குப் பிளேக் கண்டு, 7 பேர் இறந்துபோயினர். தார்வாரோடு நில்லாமல் இத்தொத்துநோய் பக்கத்துக்கிராமங்களிலும் பரவிவருகிறது. எங்கும் எலி விழுகிறது. தபால் தந்தி நிலயங்கள் ஊருக்கு வெளியே கொண்டுபோகப்பட்டன என்று பம்பாய்ச்செய்தி கூறுகின்றது.

* * *

ஸர்வதேசத் தொழிலாளர் மகாநாடு:—ஜினேவாவில் கூடும் ஸர்வதேசத் தொழிலாளர் மஹாநாட்டிற்கு முதலாளிகளின் பிரதிநிதிக்கு யோசனை கூறும் விஷயமாய் மிஸ்டர் பிரவுன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியவர்த்தகச் சங்கத்தார் இந்த நியமனத்தை ஏற்கவில்லை. இந்தியரே இதற்கு நியமிக்கப்பட வேண்டுமென்று இந்தியாகவர்ன்மெண்டிற்குச் சங்கத்தார் மனுச் செய்திருக்கின்றனர்.

* * *

ஹூப்ளியில் பட்டேல்:—ஹூப்ளிக்கு ஸ்ரீபட்டேலும் ஸ்ரீ C ராஜகோபாலாச்சாரியாரும் போய்ச் சேர்ந்தனர், காங்கிரஸ்காரர்களும் தொழிலாளர்சங்கத்தினரும் அவர்களை வரவேற்றனர். மாலையில் பட்டேல் ரயில்வேத் தொழிலாளர் சங்கத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். தொழிலாளர்கள் ஒற்றுமையுடனிருந்து முன்னேறிவர வேண்டுமென்று கூறினார். வி. வி. கிரி தொழிலாளர் சார்பாக உழைப்பதை மெச்சிக்கொண்டார்.

* * *

இந்தியக்கமிட்டி:—சைமன் கமிஷனுடன் கூடவிருந்து வேலைசெய்ய இந்தியா கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்ட இந்தியக் கமிட்டியார், இந்தியச் சீர்திருத்த விஷயமாய் ஒரு அறிக்கை தயாரித்துள்ளனர் என்றும், இம்மாதம் 25ந்தேதி யன்று சைமன் கமிஷன் முன் அவ்றிக்கை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிகின்றது. பிறகு இந்த அறிக்கை இராஜபிரதிநிதியின் அபிப்பிராயத்திற்கு விடப்படும். இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வை குறைந்தும் மாகாண அரசாங்கங்களின் பொறுப்பு அதிகமாகவும் இருக்கவேண்டு மென்பது அறிக்கையின் கோரிக்கை என்று ராய்ட்டர் செய்தி மூலம்தெரியவருகின்றது. அன்னியநாட்டு விஷயமாய் மாறுதல் செய்வதற்கான சிபார்சுகள் ஒன்றும் செய்யப்பட வில்லையாம்.

கௌசிக சிரோ கல்பம்.

தைலங்கள் இனித் தேவை யில்லை. வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், வக்கீல்களுக்கும், மாணுக்கர்களுக்கும் மற்றும் மூளைவேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது. இக்கல்பம்பாலிலாவது ஜலத்திலாவது கொதிக்கவைத்து உபயோகிக்கலாம். மண்டையிடி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல் மூளைக்கொதிப்பு முதலியவற்றை உடனே போக்கிக் கண்களுக்கு வன்மையையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

பாக்கெட் 1-க்கு அணு 8. தபாற்கூலி வேறு.

இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை:—

மானேஜர்:—சேலம் ஸ்டோர்,

சேலம்.—SALEM.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam MADRAS.

189073

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீஷேன் எபிகுரூஸ் ஜீனோன் பைரோன் அரிஸ்டாட்டல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாயினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தரனார் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

காலடி நாலூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—			
பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு	ரூ 9—8—0
ஆப்லெதர் கில்டுபயின்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு	ரூ 11—8—0
காலிகோ பயின்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு	ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)